அகத்தியர் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி

தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

# ஞானத்திருவடி

ஓங்காரக்குடில் ஆசான் அருளிய சன்மார்க்க உண்மைப் பத்திரிகை

விகாரி ❂ ஐப்பசி (அக்டோபர் – 2019) விலை: ரூ.10/–

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்**

## உள்ளடக்கம்


1. சித்தர்கள் போற்றித் தொகுப்பின் சிறப்பு ........ 5
2. சித்தர்கள் போற்றித் தொகுப்பு ........ 6
3. மகான் அசுவினித்தேவர் அருளிய ஆசி நூல் ........ 11
4. 04.11.1988 அன்று அருளிய **குருநாதரின் அருளுரை கணநாதர் ஞானோபதேசம் பாகம் - 1** ........ 16
5. தினசரி பாராயணம் – செவ்வாய்கிழமை ........ 32
6. புரட்டாசி மாத பௌர்ணமி விழா ........ 40
7. ஐப்பசி மாத பௌர்ணமி விழா ........ 40
8. குருநாதருக்கு முருகப்பெருமான் அருளிய ஆசிநூல் ........ 41
9. அன்பர்களின் அனுபவங்கள் ........ 42
10. ஓங்காரக்குடில் வெளியீடுகள் ........ 43
11. ஓங்காரக்குடில் நித்திய செயல்பாடுகள் ........ 53


ஓங்காரக்குடில் ஆசான்

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளிடம்**

**ஆசிபெறும் நேரம்**

**தினசரி மதியம் 3 மணி**

ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளை, ஓங்காரக்குடில், துறையூர்.

வளரவே பகையாவும் விலகி
வக்கிர கொடூர செயல்கள் விலகி
மலரும் அமைதி மகிழ்வு பாதையாக
மக்களை அழிக்கும் யுத்தகுணம் விலகி
விலகி மொழி இனம் சாதி என்ற
வில்லங்கமான பாகுபாடு விலகி
கலகம் உயிர்பலி எனும் வன்மம்
கலியுகத்தை விட்டு விலகி அமைதி காணும்
காணவே உலக மாற்றமாக
கலியுகத்தில் அவதாரம் புரிந்துள்ள
ஞானபண்டிதனின் மகா சூட்சுமமான
ஞானி அரங்கன் செய்யும் தருமம்

– மகான் அசுவினித்தேவர் ஆசிநூல்

அன்பார்ந்த வாசகர்களுக்கு வணக்கம்,

**ஞானத்திருவடி நூலே ஞானிகள் திருவடியாகும்.**

ஞானத்திருவடி என்னும் நூல் முற்றுப்பெற்ற மகான்களைப் பற்றி பேசுவதாகும். இந்நூலை வாங்குதல், படித்தல், மற்றவர்களுக்கு வாங்கிக் கொடுத்தல் ஆகிய அனைத்துமே ஜென்மத்தைக் கடைத்தேற்ற உதவும். எனவே இந்நூல் ஞானவாழ்வு விரும்புகிறவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம் ஆகும். இந்நூல் வீட்டில் இருந்தால் நவகோடி சித்தர்களும், சித்தர்களுக்கெல்லாம் தலைவராகிய அகத்தீசரும், அவருக்கு ஆசானாகிய சுப்பிரமணியரும் நமது வீட்டில் இருந்து அருள் செய்வதாக எண்ணவேண்டும்.

மேலும் ஓங்காரக்குடில் ஆசான் 44 ஆண்டு காலம் ஓங்காரக்குடிலில் கடுந்தவம் இருந்து வருகிறார்கள். உலக மக்களை கடவுளின் பிள்ளைகளாக பார்த்து, அவர்களுக்கு வரும் துன்பங்களிலிருந்தும், துயரங்களிலிருந்தும் விடுவித்து ஞானியர்களின் திருவடிதான் உண்மை ஆன்மீகம் என்று சொல்லி அவ்வழியில் நம்மை அழைத்துச் செல்லும் ஓங்காரக்குடில் ஆசான் முருகப்பெருமானின் கல்கி அவதாரம் **தவத்திரு ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள், ஞானிகளின் பாடல்களில், தான் உணர்ந்த பல இரகசியங்களை நம்பால் கருணைகொண்டு எளிய முறையில் அருளிய அருளுரைகள் அடங்கியதுதான் **ஞானத்திருவடி** நூல்.

விரைவில் எதிர்பாருங்கள் அற்புதமான “**ஞானயுகம்**” அமைகின்றதை!

அன்புடன்
இரா.மாதவன்.

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

**பாவபரிகாரமும் சாபவிமோசனமும் பெற்றுத்தரவல்ல அற்புத பாராயண நூல்**

**சித்தர்கள் போற்றித் தொகுப்பு**

ஞானிகள் அத்துணைபேரும் முருகப்பெருமானால் வாசி நடத்திக் கொடுக்கப்பட்டு மும்மலக் குற்றத்தை வேருடன் அறுத்து வெற்றி கண்டவர்கள். அவர்களுக்கு இறப்பும் பிறப்பும் இல்லை. நரை, திரை, மூப்பு இல்லை. சித்தர்கள் அனைவரும் மரணமில்லாப் பெருவாழ்வை பெற்றவர்கள். ஆக்கல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் எனும் ஐந்தொழில் செய்யும் வல்லமையை பெற்றவர்கள். இவர்களின் திருவடிகளை பூஜித்தாலே நாம் செய்த பாவங்களெல்லாம் நீங்கிவிடும். பாவங்களுக்கு காரணமான உயிர்க்கொலை செய்தல், புலால் உண்ணுதல், மது அருந்துதல், சூதாடுதல், வரவுக்கு மீறிய செலவு செய்தல் இன்னும்பல தீவினை செயல்களெல்லாம் கீழ்க்கண்ட சித்தர்கள் போற்றித் தொகுப்பை படித்தால் நீங்கிவிடும். பெருமைக்குரிய சித்தர்கள் போற்றித் தொகுப்பை ஒரு தீபம் ஏற்றி வைத்து பயபக்தியுடன் பணிந்து வணங்கி பாராயணம் செய்தால் இல்லறமும் சிறக்கும், வீடுபேறாகிய ஞானமும் கைகூடும்.

கல்வி கற்கும் மாணவர்கள் தினசரி பாராயணம் செய்தால், கல்வியில் சிறந்த தேர்ச்சியை பெறுவதோடு நல்ல வேலை வாய்ப்பும் அமையப் பெறுவார்கள்.

ஜென்மத்தைக் கடைத்தேற்ற விரும்புகின்ற ஆன்மீகவாதிகளுக்கு இந்த சித்தர்கள் போற்றித் தொகுப்பானது, ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ள கிடைத்த ஒரு அற்புதமான பாராயண நூலாகும்.

எதை விரும்பி சித்தர்கள் போற்றித் தொகுப்பை பாராயணம் செய்கிறீர்களோ அதை அப்படியே பெற்றுத் தரவல்ல அற்புதமான பாராயண நூல் சித்தர்கள் போற்றித் தொகுப்பாகும். சித்தர்கள் சாதி, மதம், இனம், மொழி, தேசம் கடந்து மனிதகுலத்திற்கு பொதுவானவர்கள். ஆதலினால் சித்தர்கள் போற்றித் தொகுப்பை எல்லா சமயத்தினரும், எல்லா நாட்டினரும், பேதாபேதமின்றி பாராயணம் செய்யலாம். ஆண், பெண், சிறார், பெரியோர், குடும்பஸ்தன், துறவி, பஞ்சபராரிகள், ஏழை எளியோர் என யாவரும் பாராயணம் செய்யலாம். கணவனை இழந்தவர்களும் தடையின்றி விளக்கேற்றி பாராயணம் செய்யலாம். எந்த கட்டுப்பாடும் இல்லை, எந்த சடங்குகளும் இல்லை.

அற்புதம் வாய்ந்த இந்த சித்தர்கள் போற்றித் தொகுப்பை பல கோடி பேர் பாராயணம் செய்து எண்ணற்ற பலன்களை அடைந்ததோடு அவர்களது பிரச்சனைகள் தீர்ந்திடவும், வேண்டுகோள்கள் நிறைவேறி மனம் மகிழ்ந்ததும், இவ்வுலகம் கண்ட அற்புத உண்மையாகும். இந்த சித்தர்கள் போற்றித் தொகுப்பை இன்னும் பலகோடி மக்கள் பாராயணம் செய்து மேன்மை அடைவார்கள் என்பது ஞானிகள் வாக்காகும்.

இதுவரையிலும் ஞானவாழ்வு அடைவதற்கு துணையாக இருந்ததும், இனி அடையப்போகின்றவர்களுக்கும் சித்தர்கள் போற்றித் தொகுப்பு துணையாகும் என்பது சத்திய வாக்காகும்.

## துவக்கப்பாடல்

திருவடி ஞானம் சிவமாக்கு விக்கும்
திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்
திருவடி ஞானம் சிறைமலம் மீட்கும்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே.

திருமந்திரம் : திருவடிப்பேறு : 1598

ஞானியர்களின் திருவடி பூஜைதான் உண்மை ஆன்மீகம் என்று
உலகறியச் செய்யும் வள்ளல்,
முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள்

**தொகுத்து வழங்கிய**

# சித்தர்கள் போற்றித் தொகுப்பு

| | | | |
|---|---|---|---|
| ஓம் | அகத்தியர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அகப்பைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அசுவினித்தேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அத்திரி மகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அநுமான் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அம்பிகானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அருணகிரிநாதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அருள்நந்திசிவாச்சாரியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அல்லமாபிரபு | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அழுகண்ணிச்சித்தர் | திருவடிகள் போற்றி | 10 |
| ஓம் | இடைக்காடர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | இராமலிங்கசுவாமிகள் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | இராமதேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | இராமானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | உமாபதி சிவாச்சாரியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஔவையார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கஞ்சமலைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கடைப்பிள்ளைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கடுவெளிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கண்ணானந்தர் | திருவடிகள் போற்றி | 20 |

| | | | |
|---|---|---|---|
| ஓம் | கண்ணிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கணநாதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கணபதிதாசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கதம்பமகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கபிலர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கமலமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கருவூர்தேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கல்லுளிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கலைக்கோட்டு முனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கவுபாலச்சித்தர் | திருவடிகள் போற்றி | 30 |
| ஓம் | கணராமர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | காகபுஜண்டர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | காசிபர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | காலாங்கிநாதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குகைநமச்சிவாயர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குதம்பைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குமரகுருபரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குருதட்சணாமூர்த்தி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குருராஜர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குறும்பைச்சித்தர் | திருவடிகள் போற்றி | 40 |
| ஓம் | கூர்மானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கொங்கணேஸ்வரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கோரக்கர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கௌசிகர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கௌதமர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சங்கமுனிச் சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சங்கர மகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சங்கிலிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சச்சிதானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சட்டநாதர் | திருவடிகள் போற்றி | 50 |
| ஓம் | சண்டிகேசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சத்யானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சிவயோகமாமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சிவவாக்கியர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சிவானந்தர் | திருவடிகள் போற்றி | |

| | | | |
|---|---|---|---|
| ஓம் | சுகப்பிரம்மர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சுந்தரானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சுந்தரமூர்த்தி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சூதமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சூரியானந்தர் | திருவடிகள் போற்றி | 60 |
| ஓம் | சூலமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சேதுமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சொரூபானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜம்பு மகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜமதக்னி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜனகர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜனந்தனர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜனாதனர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜனக்குமாரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜெகநாதர் | திருவடிகள் போற்றி | 70 |
| ஓம் | ஜெயமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஞானச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | டமாரானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தன்வந்திரி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தாயுமான சுவாமிகள் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திரிகோணச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திருஞானசம்பந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திருநாவுக்கரசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திருமாளிகைத் தேவர் | திருவடிகள் போற்றி | 80 |
| ஓம் | திருமூலதேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திருவள்ளுவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தூர்வாசமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தேரையர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நந்தனார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நந்தீஸ்வரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நாதாந்தச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நாரதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நொண்டிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பட்டினத்தார் | திருவடிகள் போற்றி | 90 |

| | | | |
|---|---|---|---|
| ஓம் | பத்ரகிரியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பதஞ்சலியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பரத்துவாசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பரமானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பராசரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பாம்பாட்டிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிங்களமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிடிநாகீசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிருகுமகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிரும்மமுனிவர் | திருவடிகள் போற்றி | 100 |
| ஓம் | பீர்முகமது | திருவடிகள் போற்றி | |
| ஓம் | புண்ணாக்கீசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | புலத்தீசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | புலிப்பாணிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பூனைக்கண்ணார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | போகமகாரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மச்சமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மஸ்தான் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மயூரேசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மாணிக்கவாசகர் | திருவடிகள் போற்றி | 110 |
| ஓம் | மார்க்கண்டேயர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மாலாங்கன் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மிருகண்டரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | முத்தானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மெய்கண்டதேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மௌனச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யாகோபு | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யூகிமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யோகச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யோகானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ரோமரிஷி | திருவடிகள் போற்றி | 121 |
| ஓம் | வசிஷ்டமகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வரதரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வரரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வராகிமிகி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வால்மீகி | திருவடிகள் போற்றி | |

ஓம் விசுவாமித்திரர் திருவடிகள் போற்றி
ஓம் வியாக்ரமர் திருவடிகள் போற்றி
ஓம் வியாசமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் விளையாட்டுச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் வேதாந்தச்சித்தர் திருவடிகள் போற்றி 131
ஓம் எண்ணிலா கோடி சித்தரிஷி கணங்கள்
திருவடிகள் போற்றி போற்றி.

## நிறைவுப்பாடல்

வாழ்கவே வாழ்களன் நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்கமெய்ஞ் ஞானத் தவன்தாள்
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே.

திருமந்திரம் 3047

மேற்கண்ட 131 சித்தர்கள், மகான்களின் திருவடிகளை தினசரி காலையும் மாலையும் போற்றி பூஜை செய்வதே சிறப்பறிவாகும். சிறப்பறிவு பெற்றவர்களுக்கு குடும்ப ஒற்றுமை, புத்திர பாக்கியம், உடல் ஆரோக்கியம் போன்ற நல்வினைகள் பெருகி, மது அருந்துதல், புலால் உண்ணுதல், சூதாடுதல் போன்ற தீவினைகள் நீங்கிவிடும். மேலும், மாதம் ஒருவருக்கோ அல்லது இருவருக்கோ பசித்த ஏழைகளுக்கு பசியாற்றியும் வந்தால், பாவம் புண்ணியம் பற்றி உணர்ந்து புண்ணியம் பெருகி ஞானியாவார்கள் என்பது சத்தியம்.

## ஓங்காரக்குடில் ஆசான் ஆசி!



ஓங்காரக்குடிலில் நடைபெறும் அன்னதானம் மற்றும் அறப்பணிகளுக்காக, தமிழகமெங்கும் ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம் சார்பாக ஞானத்திருவடி நூலை பொதுமக்களுக்கு கொண்டு சேர்க்கும் அன்பர்களுக்கும், அவர்கள் குடும்பத்தாருக்கும் எல்லாம் வல்ல ஞானிகள் அருள் கிட்டி எல்லா நன்மைகளும் அடைவார்கள். மேலும் உடல் ஆரோக்கியமும், நீடிய ஆயுளும், எல்லா நலமும் வளமும் பெறுவார்கள். மேலும் ஞானமும் சித்திக்கும் என்று ஓங்காரக்குடில் ஆசான் ஆசி வழங்கியுள்ளார்கள்.




அன்பான வாசகர்களே வணக்கம்

**உங்கள் ஆண்டு சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா!**

ஞானத்திருவடி நூலை படித்து, உங்கள் உணர்வுகளை எங்களோடு பகிர்ந்துகொள்ள அன்போடு அழைக்கின்றோம்.

– அன்பன் இரா.மாதவன், 98424 55661.

# விகாரி வருடம் ஐப்பசி மாத ஞானத்திருவடி நூலிற்கு
# மகான் அசுவினித்தேவர் அருளிய ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன் M.A., B.Ed.,
திருச்சி. செல் : 99655 71837

1. கலிகால துன்பங்கள் போக்கிட
   கலிமாயை சிக்கல்கள் விரட்டிட
   அழியாமை எனும் ஞானமதை
   அருளுபதேசமாக வழங்கி நின்று
2. வழங்கி நின்று மக்களிடையே
   வழிகாட்டி காக்கும் தவசியே
   களங்கமற தருமம் விதைத்து
   காத்திடும் ஆறுமுக அரங்க ஞானியே
3. ஞானியே உன் ஞானமாக வரும்
   ஞானத்திருவடி நூலுக்கு ஆசியை
   இனிமைபட அசுவினித்தேவர் யானும்
   இயம்பிடுவேன் விகாரி துலை திங்களுக்கு
4. திங்களிலே அரங்கன் ஞானசபை
   தேசமெங்கும் அறமாகப் பரவி
   ஓங்கார ஓசைபட உலகமே
   உயர் ஞான பலம் அடையும்படி
5. அடையும்படி அரங்கஞானி தவம்
   ஆற்றலாகப் பரவிட இருக்க
   தடைபடா ஞானியரை நோக்கி
   தரணியோர் வருகை தந்துமே
6. தந்துமே சன்மார்க்க நெறியில்
   தன்னார்வ தொண்டர்கள் ஆகி
   சிந்தை குளிர குருவாய் ஏற்று
   செப்பிட ஏழாம் படை வீடு நோக்கி
7. நோக்கியே அணுகி உயர் தீட்சை
   ஞானதீட்சையாக ஏற்றுமே
   தேக்கமின்றி உலக மக்கள் வர
   தெளிவு திடம் தெய்வீக நிலை பெருகி

8. பெருகியே சாத்வீகம் சமாதானம்
பேரண்டமே அழிவுசார் எண்ணமகற்றி
தருமசிந்தை தயவுநிலை பெருகி
தவராசன் வழிகாட்டல் வளர வளர

9. வளரவே பகையாவும் விலகி
வக்கிர கொடூர செயல்கள் விலகி
மலரும் அமைதி மகிழ்வு பாதையாக
மக்களை அழிக்கும் யுத்தகுணம் விலகி

10. விலகி மொழி இனம் சாதி என்ற
வில்லங்கமான பாகுபாடு விலகி
கலகம் உயிர்பலி எனும் வன்மம்
கலியுகத்தை விட்டு விலகி அமைதி காணும்

11. காணவே உலக மாற்றமாக
கலியுகத்தில் அவதாரம் புரிந்துள்ள
ஞானபண்டிதனின் மகா சூட்சுமமான
ஞானி அரங்கன் செய்யும் தருமம்

12. தருமமே உலகை மாற்றும்
தருமம் பெருகிட எல்லா மக்களின்
கருமவினைகளும் அகன்றோடி
கண்ணியமிக்க மக்களாய் மாறி

13. மாறியே மனநலம் மனபலம்
மறுமை வெல்லும்படி சக்தி
பெருகியே கலியுக வாழ் மக்கள்
பேராசான் அரங்கன் அருளைபெற

14. அருள்பெற ஆபத்து கண்டம் விலகி
ஆயுள் பெருக்கம் அடைவதுடன்
இருள் என்ற பிறவித் தொடரும்
இடர்களும் விலகி ஞான ஜோதி ஆன

15. ஆனதொரு பிறவாத பெரும் பேறு
ஆசான் தலைமை ஏற்க நடக்கும்
தானதரும நெறி எப்புவியில்
தடைபடா வளர்கிறதோ பரவுகின்றதோ

16. ஆனதொரு அந்தவித தேசம்
ஆறுமுகனார் அருளாசி பெறும்
ஞான பூமியாகி எல்லா வகை
நன்மைகளும் தானாக அடையும்

17. அடையுமே மும்மாரி பொழிந்து
அளவிலா நீர்வளம் நிலவளமோடு
தடையின்றி பசுமை பயிர்வளம்
தனதானியம் சகல வளமும் கண்டு
18. கண்டுமே பொருளாதார வளர்ச்சி
காப்பாக ஆளுமை தருமமாக
தொண்டு வழி பதவியாளர்களும் சிறந்து
தெய்வ சக்திபட தேசங்களும் வளரும்
19. வளரும் மலரும் ஞானயுகமாக
வல்லமை பெறும் வடிவேலன் தலைமை ஆக
வளரும் மலரும் ஞானதேசிகனாரின்
வரலாறாக வள்ளல் காலமாக
20. ஆகவே ஞானசித்தர் காலமதின்
அறிகுறியான சத்திய யுகமாற்றம்
மகான் அரங்கன் கொள்கையாக
மக்களை தழுவி செயல்பாடாக
21. ஆகவே இனியும் காலம் கடத்தா
அரங்கன் ஞானமாக வரும்
வகையான ஞானத்திருவடி நூலை
வணங்கி பெற்று வாசிக்க பூஜிக்க
22. பூஜிக்க எந்த தேசத்திலிருந்தாலும்
பூரண ஞான சூட்சுமமாக அரங்கன்
ஆசி தந்து வந்து அழியாமை அருள்வார்
ஆசானாக ஏற்க அனைத்தும் பெறுவீர் அசுவினித்தேவர் ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அசுவினித்தேவர் அருளிய விகாரி வருடம் ஐப்பசி மாத ஞானத்திருவடி நூலிற்கான ஆசி நூலின் சாரம் :

கலிகாலத்தின் துன்பங்களைப் போக்கி மக்களை காத்திட கலியுக மாமாயையில் இருந்து கலியுக சிக்கல்களை விரட்டி காத்திட அவர்களுக்கு அழிவிலாமை எனும் ஞானத்தினை அருளுபதேசமாக மக்களுக்கு வழங்கி குருமுகமாக அருள் செய்து மக்களுக்கு வழிகாட்டி காத்து ரட்சிக்கின்ற மகா ஞானதவசியே ஆறுமுக அரங்கமகா தேசிகனே களங்கமற்ற தூய தருமத்தை விதைத்து அதை காத்து பெருக்கிடும் ஆறுமுக அரங்கமகா தேசிகனே உமது ஞான வெளிப்பாடாக வெளிவருகின்ற ஞானத்திருவடி நூலிற்கான ஆசியினை அசுவினித்தேவர் யானும் விகாரி வருடம் ஐப்பசி மாதத்திற்கு வழங்கிடுவேன் என்கிறார் மகான் அசுவினித்தேவர்.

உத்தம மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் ஞானசபையானது தேசமெங்கும் தருமமாக பரவி ஓங்காரன் முருகப்பெருமானின் திருநாமங்கள் ஒலித்திட உலகமே உயர் ஞானத்தினை அடையும் விதத்தினிலே ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தவமானது உலகமெங்கும் ஆற்றலாக பரவிட இருக்குதப்பா.

ஆதலினாலே ஆறுமுக அரங்கமகா தேசிகனாரை தடையின்றி உலக மக்களெல்லாம் வருகை தந்து வந்து வணங்கி அரங்கர் கூறும் சன்மார்க்க நெறியினை பின்பற்றி பொதுநலம் மிக்கோராய் ஆகி தன்னலம் மறந்து தன்னார்வ தொண்டர்களாக ஆகி அரங்கமகான் உளம் மகிழ நடந்து, அரங்கன் திருவடிக்கு சீடர்களாக ஆகி அரங்கமகானை குருவாய் உளமார ஏற்றுக் கொண்டு ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலை நோக்கி பயபக்தியுடன் பணிந்து வந்து அரங்கன் திருவடிகளை வணங்கி தீட்சை உபதேசம்தனை உயர் ஞான தீட்சைகளாக அடைந்திட வேண்டுமப்பா.

அரங்கரிடத்து உலகோர் தீட்சை உபதேசம் அடைந்து அரங்கமகானை பின்தொடர்ந்து வரவர, உலக மக்களிடத்து மனத்தெளிவு உண்டாகும், மனோதிடம் உண்டாகும், உலகினில் தெய்வீக நிலை பெருகும், உலகமெங்கும் சாத்வீகமும் சமாதானமும் உண்டாகி இந்த பேருலகம் முழுதும் அழிவுகள் சம்பந்தப்பட்ட எண்ணங்கள் எல்லாம் அகன்று தருமசிந்தையும் தயவுசிந்தையும் பெருகிடும், தவராசன் ஆறுமுக அரங்கமகானின் வழிகாட்டலில் மக்கள் பின்தொடர்ந்து வந்து அரங்கனின் கொள்கைகள் உலகினில் வளர வளர உலக மக்களிடையே உள்ள பகைகள் யாவும் விலகி வக்ரமான எண்ணங்கள் ஒழியும், கொடூரமான செயல்கள் விலகிடும், உலகமெங்கும் அமைதியும் மகிழ்வும் மலர்ந்து சமாதானம் நிலவும்.

உலக நாடுகளிடையேயும் மக்களிடையேயும் உள்ள யுத்த குணம் விலகி உலக மக்களிடையே உண்டான சாதி, மத, இன, மொழி, தேச பாகுபாடுகள் எல்லாம் விலகி கலகம் இல்லாத உயிர்ப்பலி இல்லாத நிலை உருவாகி மக்களிடம் உள்ள வன்மகுணம் எல்லாம் விலகி உலகமே அமைதி காண்கும்.

உலகினில் பெரும் மாற்றங்களை உண்டாக்கிட முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்திட்ட ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தானதருமங்களே இவ்வுலகை மாற்றும் வல்லமைமிக்க சக்தியாகும். அரங்கரின் தருமம் பெருகிட பெருகிட உலக மக்களிடம் உள்ள கர்மவினைகள் யாவும் விலகிடும். உலக மக்களெல்லாம் கண்ணியம்மிக்க மக்களாக மாறி மனநலம் மிக்கவராய் மனோபலம் மிக்கவராய் ஆகி வறுமையை வெல்லும் சக்தியை பெற்று வாழ்வார்கள்.

உலகோர் உலகப் பேராசான் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் அருளைப் பெற்றிட அவரெல்லாம் அவர்களுக்கு உண்டான ஆபத்துகளும் கண்டங்களும் விலகி நீடிய ஆயுளைப் பெறுவார்கள். அவர்களது வாழ்வின்

இருளாகிய அறியாமையும் விலகி அவர்களைப் பற்றி நீங்காது ஜென்மஜென்மமாய் தொடரும் பிறவித் தொடரும் அதன் காரணமாய் விளையும் துன்பங்கள் விலகிடும் அவர்தம்முள்ளே. ஜோதியாகிய ஞானம் தோன்றி அறியாமை இருள் அகன்று பிறவாத பெரும்பேற்றை அரங்கன் தலைமையை ஏற்பதன் மூலம் அடைந்து சிறப்பார்கள்.

**தானதருமங்கள் பூமியில் எந்த இடத்தில் அதிகமாக நடக்கிறதோ, தடைபடாமல் வளர்கிறதோ, எந்த தேசத்தில் அதிகமாக பரவுகிறதோ அந்த தேசமே முருகப்பெருமானின் அருளாசிகளை பெறுகின்ற தேசமாகும். அந்த தேசம் ஞானபூமியாக ஆகி எல்லா வகையான நன்மைகளையும் தானாகவே அடைந்து சிறப்படையும். அந்த தேசத்தினில் பருவமழை தவறாது பெய்யும். மாதம் மும்மாரி பொழியும், அளவிலாத நீர்வளமும் நிலவளமும் பெருகி நாடெங்கும் பசுமையாக பயிர்வளம் மிக்கதாக ஆகி பொருளாதார வளர்ச்சியை அடைந்து சிறக்கும். அந்த தேசத்தினை ஆட்சி புரிபவர்களும் பதவி வகிப்போரும் தருமசிந்தை உடையவராக இருப்பர், தெய்வீக சக்தியுடன் அந்த நாடு வளர்ச்சியடையும்.**

உலகமெங்கும் அரங்கன் தருமம் பரவ பரவ, உலகம் தரும உலகமாக ஆகி வளர்ந்து ஞானயுகமாக மலர்ந்திடும், எல்லா வல்லமைகளையும் உலகம் பெறும். உலகினில் ஞானபண்டிதன் முருகப்பெருமானின் தலைமையில் ஞானஆட்சியாக மலரும். ஞானதேசிகன் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் வரலாறாக அரங்கமகா வள்ளலின் பொற்காலமாக ஆகி உலகம் ஞானசித்தர் காலமாக இந்த கலியுகம் மாறிடும்.

ஞானசித்தர் காலமாகிய சத்திய யுகமாற்றம் உலகினில் உண்டாகி மகான் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் கொள்கைகள் மக்களை அடைந்து மக்களின் செயல்பாடாக மாறிடும். ஆதலினால் உலக மக்களே இனியும் காலம் தாழ்த்தாமல் ஆறுமுக அரங்கரின் ஞான வெளிப்பாடாக வெளிவரும் ஞானத்திருவடி நூலினை பயபக்தியுடன் வணங்கி வாங்கி பெற்று வாசித்து பூஜித்து கடைப்பிடித்து வர, அவர் எந்த தேசத்தில் இருந்தாலும் பூரண ஞான சூட்சுமமாக அரங்கமகான் ஆசி தந்து அழிவிலாமையை அருள் செய்து காப்பார்.

ஆறுமுக அரங்கமகானை குருவாக ஏற்க அனைத்தையும் பெற்று சிறப்படைவீர்கள் எனக் கூறுகிறார் மகான் அசுவினித்தேவர்.

–சுபம்–

திருவிளக்கு பூஜை உங்கள் பகுதியில் செய்ய தொடர்புக்கு

**R.சுரேஷ்** – 94434 21935

திருச்சி மாவட்டம், துறையூர், ஓங்காரக்குடிலாசான்,
முருகப்பெருமானின் கல்கி அவதாரம்
தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள்
ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கத்தில்
04.11.1988 அன்று அருளிய

## கணநாதர் ஞானோபதேசம் பாகம் – 1

ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம

அன்புள்ள சன்மார்க்க சங்க அன்பர்களே தொண்டர்களே உங்கள் அனைவருக்கும் வணக்கம்.

மகான் கணநாதர் ஆசான் அகத்தீசருடைய சீடர். ஆசான் அகத்தீசருடைய சீடர்கள் மூன்று லட்சம் பேர்கள். இன்னும் எத்தனையோ கோடி பேர் சீடர்களாவார்கள். சீடன் என்று சொன்னாலே, இவ்வுலகத்தில் ஆசான் அகத்தீசருடைய சீடர்களைத்தான் குறிக்கும். மகான் புஜண்டமகரிஷி, மகான் கொங்கணமகரிஷி, மகான் நந்தீசர் போன்ற முனிவர்களெல்லாம் ஆசான் அகத்தியர் பாதத்தைப் பற்றி பூஜித்து, ஆசான் அகத்தீசருடைய சீடர்களானார்கள். மகான் கணநாதர் என்பவர் ஆசான் அகத்தீசருடைய சீடராவார்.

இன்னும் எத்தனையோ பஞ்சமாபாவிகள் ஞானிகள் பாதத்தைப் பற்றி ஞானியாவார்கள். ஒன்பது வாசலை அறிந்து உணர்ந்த மக்கள், பத்தாம் வாசலை அறிய ஆசைப்பட்டால் ஆசான் அகத்தீசர் நாமத்தைச் சொல்ல வேண்டும். அப்பொழுதுதான் இந்தத் துறைக்கு வர முடியும். ஆசான் அகத்தீசர் திருவடியை பூஜித்து மகான் கணநாதர் சித்தி பெற்றார். இப்பொழுது நாம் ஆசான் கணநாதர் அருளிய கணநாதர் ஞானோபதேசம் 16ல் உள்ள பாடல்களைப் பார்ப்போம்.

**சிவபெருமான் திருவருளே சிறந்தகாப்பு**
**ஜெகத்திலுள்ளோர் போற்றுகின்ற தேவிகாப்பு**
**தவவுருவாய் நிறைந்துநின்ற சத்திகாப்பு**
**தாயான மனோமணிதன் பாதங்காப்பு**
**பவமகல வெனைப்பெற்ற மாதாகாப்பு**
**பக்குவமா யெனைவளர்த்த சிவமேகாப்பு**
**நவகோணத் துள்ளிருக்கும் வெளியேகாப்பு**
**நாதாந்தத் தெரிந்தருளும் நாதன்காப்பே.**

**– கணநாதர் ஞானோபதேசம் 16 – காப்பு பாடல்.**

இது ஒரு காப்புச் செய்யுள். இதில் யோகத்தினுடைய சாரம் மற்றும் அதன் தொகுப்பும் முடிவும் இருக்கிறது. இதற்குப் பூரண விளக்கம் சொல்ல வேண்டுமென்றால் பல மணி நேரம் ஆகும். ஆகவே சுருக்கமாகப் பார்ப்போம்.

**சிவபெருமான் திருவருளே சிறந்தகாப்பு** – இந்து மதத் தலைவன் சிவபெருமான் ஆவார். முதல் ஜென்மத்தில் ஆசான் சுப்பிரமணியருக்கு தந்தையாகச் சிவபெருமான் இருந்தார். அடுத்த ஜென்மத்திலே ஆசான் சுப்பிரமணியருக்கு சீடராகி, சிவபெருமான் ஞானத்தைப் பெற்றார். பிள்ளை தோன்றுவதற்குக் காரணமான தந்தையைப் போற்ற வேண்டுமென்ற காரணத்திற்காக சிவபெருமானை இந்து மதத் தலைவனாக வைத்தார்கள். அதனால்தான் மகான் கணநாதர் இதையே மையமாக வைத்துத் தனது கவியில் சொல்கிறார்.

**சிவபெருமான் திருவருளே சிறந்தகாப்பு** – காப்பு என்று சொல்லாமல் சிறந்த காப்பு என்று சொல்கிறார். ஆதி தலைவன் சிவபெருமான். அவருடைய பாதத்தைப் பற்றி பூஜிப்பதே சிறந்த வழிமுறை என்கிறார்.

**ஜெகத்திலுள்ளோர் போற்றுகின்ற தேவிகாப்பு** – ஜெகம் என்பது உலகம். தேவி என்பதைச் சக்தி என்று சொல்வார்கள். உடம்பை சக்தி என்றும், உயிரைச் சிவன் என்றும் சொல்வார்கள். உடம்பு சக்தி, உயிர் சிவம்.

உடம்பை எவன் போற்றுகின்றானோ, அவன்தான் ஞானி. அந்த உடம்பிற்கு சக்தி என்றும், தேவி என்றும், தாய் என்றும் பொருள். உடம்பு என்று சொல்லப்பட்ட சிறந்த செல்வத்தை அறிந்தான். அந்தச் செல்வத்தைப் போற்றுகிறான். அந்த உடம்பு அவனுக்குத் தாயாக இருந்து அருள் செய்கிறது. எந்தத் துறைக்கு இவன் முயற்சிக்கின்றானோ, அந்தத் துறைக்கு உற்ற துணையாக இருப்பது இந்தத் தாய்தான். அதைத் தாயாகச் சொல்வான்.

ஜெகத்திலுள்ளோர் போற்றுகின்ற தேவிகாப்பு என்று சொல்கிறார். ஞானியர்களை மையமாகக் கொண்டதுதான் ஜெகம். ஞானியர்கள் ஆசான் அகத்தீசர் துணையைக் கொண்டுதான் ஞானத்தை அடைந்திருக்கிறார்கள். ஆசான் அகத்தீசர் துணையைக் கொண்டு ஞானத்திற்குப் போனாலும், உடம்பு என்று சொல்லப்பட்ட தாயின் துணையைக் கொண்டுதான் ஞானத்தை அடைந்திருக்கிறார்கள். இந்த உடம்பை எவன் இழக்கிறானோ அவன் ஞானத்தை அடைய முடியாது. இந்த உடம்பைக் காமத்திற்குப் பயன்படுத்தும்போது, உடம்பை அவன் இழந்து விடுகிறான். இந்த உடம்பைப் பற்றி தெரியாவிட்டால் அவன் தாயைப் பற்றி அவன் தெரிந்து கொள்ளவில்லை என்று பொருள்படும்.

**மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல் பிறப்புஅறுக்கல்**
**உற்றார்க்கு உடம்பும் மிகை?**

**– திருக்குறள் – துறவு – குறள் எண் 345.**

ஏ மனித வர்க்கமே! ஆன்மீகவாதிகளே! நீங்கள் ஏன் மற்ற தொடர்பை வைத்துக் கொள்கிறீர்கள். பிறவித் துன்பத்தை ஒழிக்க நீ முற்படும்போது, மற்ற தொடர்புகளை நீங்கள் நீக்கிக் கொள்ள வேண்டும். உடம்பு என்று சொல்லப்பட்ட சிறந்த செல்வத்தைப் பெற்றிருக்கின்ற நீ, உடம்பைப் பற்றி அறிந்தால் மட்டும் போதாது. உடம்பைப் போற்றி காக்கக்கூடிய அறிவு உனக்கு இருக்க வேண்டும். ஆகவே அவன் தன்னை அறிந்து கொண்டு, உடம்பு என்று சொல்லப்பட்ட தாயைப் பூஜிக்கிறான்.

**ஜெகத்திலுள்ளோர் போற்றுகின்ற தேவிகாப்பு –** உடம்புதான் நமக்குக் காவலாக இருக்கும். உடம்பைக் காப்பாற்றுவதற்குரிய பரிபக்குவ அறிவு ஒருவனுக்கு வந்தால் அவனுக்கு ஞானியாகக் கூடிய வாய்ப்பிருக்கிறது. ஒருவன் உடம்பு என்று சொல்லப்பட்ட சிறந்த செல்வத்தைப் பெற வேண்டுமென்றால், அவன் முன் ஜென்மத்தில் ஞானிகளின் பாதத்தைப் பற்றி பூஜை செய்திருக்க வேண்டும், ஏழை எளிய மக்களுக்கு அன்னதானம் செய்திருக்க வேண்டும். முன் ஜென்மத்தில் ஏழை எளிய மக்களுடைய பசியைத் தீர்த்து, அவர்களுடைய உடம்பின் ஆக்கத்திற்குக் காரணமாக இவன் இருந்து, ஞானிகளைப் பூஜை செய்து வந்ததால். அதனால் இந்த ஜென்மத்திலே அவன் ஆரோக்கியமான உடம்பு என்று சொல்லப்பட்ட செல்வத்தைப் பெற்றிருக்கிறான். அவனுடைய தேகம் பாதுகாப்பாக இருக்கிறது.

இதையெல்லாம் அறியாமல் மற்ற உயிர்களுக்கெல்லாம் முன்ஜென்மத்தில் இவன் துன்பம் செய்திருந்தால், அந்தத் துன்பமே இந்த ஜென்மத்தில் இவனுடைய உயிருக்குத் துன்பத்தை உண்டாக்குகிறது. மற்ற உயிர்களுக்குச் செய்த துன்பம் இந்த உடம்பைப் பாதிக்கும்.

உடம்பு என்பது சிறந்த செல்வம். ஒருவனுக்கு உடம்பு ஆரோக்கியமாக இருக்குமேயானால், ஆரோக்கியமான தாயால் காப்பாற்றப்படுகிறான் என்று பொருள்படும். ஆரோக்கியமான உடம்புதான் ஆரோக்கியமான தாய். ஆகவே உடம்பைப் போற்றுகின்ற மக்களெல்லாம் விஷயார்த்தம் உள்ள மக்கள். அந்தத் தாயைத்தான் ஜெகத்திலுள்ளோர் போற்றுகின்ற தேவிகாப்பு என்று சொல்வார்.

**இரவிதனை மதியோடே சேர்த்தால்யோகம்**
**எட்டாண்டு பார்த்துவர ஞானமுண்டாம்**
**உறவுடனே வல்லபையுங் கணேசனாகி**
**உறுதியுடன் சத்திசிவ பூசைசெய்து**
**பறவிநிதந் தாபரத்தின் சலிப்பில்லாமற்**
**பரவெளியே கெதியென்று பணிந்துநிற்கத்**
**திறவுகோல் சுழினையடா சித்திமுத்தி**
**திங்கள்பதி னாறுசென்றால் திட்டம்பாரே.**

**– கணநாதர் ஞானோபதேசம் 16 – கவி எண் 1.**

**இரவிதனை மதியோடே சேர்த்தால் யோகம் –** முன் ஜென்மத்தில் விஷயம் அறிந்து யோகம் செய்ததால், இந்த ஜென்மத்தில் அவனுக்கு யோகம் அமைகிறது. இரவிதனை மதியோடே சேர்த்தால் அதுதான் யோகம். இரவி என்கிற சூரிய கலையையும், மதி என்கிற சந்திர கலையையும் சேர்த்தால் அதுதான் யோகம்.

மூச்சுக்காற்றை இடது நாசியில் இழுத்து வலது நாசியில் விடுவது, மூச்சுக்காற்றை கட்டுவது போன்றவை யோகம் அல்ல. சிலபேர் தண்ணீரில் யோகம் செய்வான். இரண்டு மணி நேரம் அப்படியே இருப்பான். இதெல்லாம் ஆர்வத்தின் காரணமாகச் செய்கிறானே தவிர, அதற்குப் பெயர் யோகமல்ல.

**இரவிதனை மதியோடே சேர்த்தால் யோகம் –** அவ்வளவு இலகுவாக இதைச் சேர்க்க முடியாது. இந்தத் துறையில் உள்ள மக்கள் மிகமிக நுணுக்கமான நெறியைப் பின்பற்றித்தான் வந்திருக்கிறார்கள். இடகலையையும், பிங்கலையையும் சுழிமுனையில் செலுத்திய ஞானிகளின் பாதத்தைப் பற்றுவதுதான் பக்தி. பக்தி செலுத்தினாலன்றி இடகலையையும் பிங்கலையையும் சேர்க்க முடியாது.

**வளியினை வாங்கி வயத்தில் அடக்கில்**
**பளிங்கொத்துக் காயம் பழுக்கினும் பிஞ்சாம்**
**தெளியக் குருவின் திருவருள் பெற்றால்**
**வளியினும் வேட்டு வளியனு மாமே.**

**– திருமந்திரம் – பிராணாயாமம் – கவி எண் 569.**

வளி என்றால் காற்று. காற்றை இரேசித்து வயிற்றில் அடக்க வேண்டுமென்று சொல்கிறார்.

ஆசான் திருமூலதேவர் சொன்ன முறையைப் பற்றி அறியாமல், இவன் காற்றை வயிற்றில் அடக்கினான். மூக்கு பக்கமோ, வாய் பக்கமோ காற்றை இழுத்து அப்படியே நிறுத்தி அடக்குவான். அப்படி அடக்கிய காற்றை விட்டவுடன் வெளியே போய்விடும்.

நம் உடம்பிற்குள்ளே எப்பொழுதும் காற்று உருவாகக் கூடிய கருவிகரணங்கள் இருக்கிறது. லேசாகக் காற்றை நிறுத்தினால் போதும், உள்கருவி கரணங்கள் இயக்கத்தின் காரணமாக மேலும்மேலும்மேலும் காற்று உருவாகிக் கொண்டே வரும். அதனால் வயிறு உப்பிக் கொள்ளும். நேரம் ஆகஆகக் காற்று உருவாகிக் கொண்டே இருக்கும். அடக்கிய காற்றை விட்டுவிட்டால் தப்பித்துவிடுவான். ஆனால் மேலும் மேலும் காற்றை வயிற்றில் அடக்கினால், உடலில் உள்ள மிருதுவான பகுதியில் வெடித்து வெளியேறும். கண், காது, மூக்கு போன்ற மிருதுவான பகுதிகளில் காற்று தாக்கி வெடித்து மூக்கிலேயும், காதிலேயும் இரத்தம் வந்து இறந்து போவான். இப்படிச் செத்துப்போனவனைப் பார்த்து உலக மக்கள் சமாதியாகிவிட்டார் என்றும், பரிபூரணம் அடைந்துவிட்டாரென்றும் சொல்வார்கள்.

பரிபூரணம் என்றால் இடகலையும், பிங்கலையும் சேர்ந்து சுழிமுனையில் ஒடுங்கினால் அது பூரணம். பரி என்றால் குதிரை, பூரணம் என்றால் நிறைவு என்று பொருள்படும். ஒடுங்கினால் அந்தக் காற்று வெளிப்படாது.

**வளியினை வாங்கி வயத்தில் அடக்கில்** – மூச்சுக்காற்றை வயிற்றில் அடக்கினால், **பளிங்கொத்துக் காயம் பழுக்கினும் பிஞ்சாம்** என்கிறார்.

இளமையாக இருப்பவனின் தேகத்தைப் பார்த்தால் கரலாக்கட்டை போன்றிருக்கும். அப்படியே மினுமினுவென்று இருக்கும். ஆனால் அந்த வாலிபம் நீடிக்காது. அந்தத் தோற்றம் மாறும். அழகுத் தரக்கூடிய கருவிகரணங்கள் அத்தனையும், இளமை மாறினால் முதுமை வரும். முதுமை வந்தாலும் இந்தக் காற்றை அடக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். வாசி என்று சொல்லப்பட்ட மூச்சுக்காற்றை வயிற்றிலே அடக்கக் கற்றுக் கொண்டவன், முதுமை அடைந்தாலும் மீண்டும் இளமை வரும்.

**பளிங்கொத்துக் காயம் பழுக்கினும் பிஞ்சாம்** – இளமையில் மினுமினுவென்று உடம்பு திடமாக இருக்கும். அப்பேர்ப்பட்ட உடம்பு பழுத்தால் நரைதிரை வந்து கண் பஞ்சடைந்து நாறும். உடம்பு தோலும் துருத்தியுமாக பார்ப்பதற்கு அருவெறுப்பான உடம்பாகிவிடும். ஆனால் மீண்டும் இளமை திரும்பும் என்கிறார்.

**பழுக்கினும் பிஞ்சாம்** – வல்லமை பொருந்திய இளமையான மிகச்சிறப்பான உடம்பிற்கு முதுமை வரும். இந்த முறையைப் பின்பற்றினால் அந்த முதுமை நீங்கி இளமை வரும் என்கிறார்.

**தெளியக் குருவின் திருவருள் பெற்றால்** – இளமை மாறி முதுமை வந்த போதிலும், மூச்சுக்காற்றை வாங்கி வயிற்றில் அடக்கினால், மீண்டும் இளமை வருமென்று சொல்லிவிட்டேன். ஆனால் இந்த இரகசியத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால், தெளிவைப் பெற்ற குருவின் திருவருளைப் பெற வேண்டும். அருள் என்று சொல்லாமல் திருவருள் என்று சொல்கிறார்.

ஆசான் மனதை எந்த அளவிற்குக் குளிரச் செய்கிறானோ, அந்த அளவிற்குத் திருவருள் கிடைக்கும். அது எப்படிக் கிடைக்கும்? இவன் எவ்வளவு தொண்டு செய்த போதிலும், அந்தத் தொண்டிற்கு ஏற்றப் பணிவு இருக்குமேயானால், அவரது உள்ளம் பூரிக்கும். இப்படிப் பூரிக்கபூரிக்க இவனுக்கு இயல்பாகவே அந்த நல்லுணர்வு வரும். இந்தத் துறையில் வருகின்ற மக்களின் தன்மையைப் புரிந்து கொள்ளாமல், தொண்டு செய்துவிட்டு, அவர்களை மதிக்காவிட்டால், தொண்டிற்கேற்ற ஆதாயம் கிடைக்குமே தவிர, மிகுதியாகத் திருவருள் கிடைக்காது. தெளியக் குருவின் திருவருள் கிடைக்காது. தொண்டு செய்கிறான் என்பதனாலே, ஆசான் அகத்தீசரே இந்தப் பிள்ளை தொண்டு செய்கிறான், அவனுக்கேற்ற சூழ்நிலை அமைய வேண்டுமென்று நினைப்பார். இவனுக்கு ஞானம் கொடு என்று கேட்பதற்கு மனம் தூண்டாது.

**தெளியக் குருவின் திருவருள் பெற்றால்**
**வளியினும் வேட்டு வளியனு மாமே.**

காற்றைவிட மென்மையாகலாம். வளி என்றால் காற்று. காற்றில் பறக்க நீ விரும்பினால் அது உனக்குக் கைகூடும் என்கிறார். வேட்டுவ என்றால் விரும்புதல் என்று அர்த்தம். எவ்வளவு பெரிய இரகசியம் இருக்கிறது? ஆனால் இதையெல்லாம் அறியாமல் மூக்கு வழியாகக் காற்றை இழுத்து நிறுத்துவான். அதனால் வெகுவிரைவில் கிராணி வந்து கைகால் வீங்கி இறந்து போவான்.

**தெளியக் குருவின்** – இந்தத் தத்துவத்தைத் ஆராய்ந்து தெளிந்து கொள்வதற்குக் குருவின் திருவருளைப் பெற வேண்டும். நாங்கள் அடைந்த ஒன்றை நீங்களும் அறிந்து அடைய வேண்டும். நாங்கள் முன் ஜென்மத்தில் பெருமையுற்ற தவத்தோனுக்கு வழுவாது தொண்டு செய்தது மட்டுமல்ல, ஆசானை நான் மதித்தேன். அவர் என்னை மரியாதை உள்ளவன், பணிவுள்ளவன் என்று என்னை ஏற்றுக்கொண்டு அங்கீகரித்தார். தொண்டு செய்ததோடு, அவரை பணிந்ததாலே அவர் உள்ளம் பூரித்தது. அந்தப் பூரிப்பே எனக்கு நல்லுணர்வு மிகுதியானதற்கு காரணமானது. நல்லுணர்வு மிகுதியான காரணத்தினால்தான் மூச்சுக்காற்றின் இரகசியம் எனக்குத் தெரிந்தது. இல்லையென்றால் நாமும் காற்றைக் கண்டபடி ஸ்தம்பித்துவிட்டு, நாமும் யோகம் செய்து கொண்டிருக்கிறோம் என்று ஏமாந்து கொண்டிருப்போம். இதனால் வெகு விரைவில் நரைதிரை வந்து, கைகால் வீங்கி, அநேக நோய்களுக்கு ஆட்பட்டு இறந்து போவான்.

குருவின் திருவருளைப் பெற்றதால் எங்களை அவர் காப்பாற்றுகிறார். இன்னது செய்ய வேண்டும், இன்னது செய்யக் கூடாதென்று என்று அவ்வப்போது எங்களுக்குச் சொல்கிறார். இந்த வாய்ப்பை நான் பெற்றதற்கு உண்டான வழிமுறை இதுதான். வேறு எந்தவிதமான சடங்குகளும் கிடையாது.

இதுபோன்ற அதிஅற்புதமான வாசி என்று சொல்லப்பட்ட மூச்சுக்காற்றை வயிற்றில் அடக்குவதற்குரிய மார்க்கத்தை அறியாமல், அதற்குரிய பூஜா விதிமுறையை மேற்கொள்ளாமல் வாசிப்பயிற்சியை செய்யக் கூடாது.

நல்வினை தீவினைக்கேற்றார் போல் அவரவர்களது வாழ்க்கை அமையும். பூஜாவிதியின் காரணமாகவும், தர்மத்தின் காரணமாகவும் மிகுந்திருந்த தீவினை நீங்கும். மனிதனுக்குத்தான் இறைவன் திருமணம் செய்து வைக்க வேண்டும். ஆனால் சாமிக்கு மனிதன் திருமணம் செய்து வைக்கிறான். இது முறை அல்ல. திருமணம் என்பதற்குப் பொருள் இடகலை என்று சொல்லப்பட்ட சக்தி, பிங்கலை என்று சொல்லப்பட்ட சிவம் ஆகிய இரண்டையும் புருவமத்தி என்கிற கோவிலிலே சேர்த்து வைப்பதுதான் திருமணம். இந்தத் திருமணத்தை எவன் கண்டானோ, அவன்தான் மரணமில்லாப் பெருவாழ்வைப் பெறுவான்.

பாரப்பா ரவிமதியை யார்தான் காண்பார்
பாடுபட்டு மனங்கசிந்த பண்போன்காண்பான்
நேரப்பா சுழிமுனையோ னொற்றைக்கொம்பன்
நினைவான வல்லபையோ யெண்ணக்காரி
ஆரப்பா அறிவார்க ளிருவர்கூத்தை
அடிமுடியுங் கண்டவனே அதிஷ்டஞானி
காரப்பா நிர்மலத்தை யொடுக்கியப்பா
களிப்புற்று ஆசையற்றுக் காணுகாணே.

– கணநாதர் ஞானோபதேசம் 16 – கவி எண் 2.

காணப்பா விதமென்ன மனமாதித்தன்
கையிலாச்சு அறிவுநந்தி விந்துமாச்சு
பூணப்பா யீதிரண்டுஞ் சேருங்காலம்
பூரணமாம் வாசியிது அம்மாவாசி
தோணப்பா யிடகலைபிங் கலையுமாகி
சுழிமுனையு மொன்றான சூட்சங்கண்டால்
வீணப்பா பெண்மாயை வீறுபோச்சு
விருதுபெற்ற ஆங்காரம் விழலாய்ப்போச்சே.

– கணநாதர் ஞானோபதேசம் 16 – கவி எண் 3.

போச்சப்பா அகாரத்தில் உகாரஞ்சேர்ந்த
போதத்தால் மகாரமது புருவமையம்
ஆச்சப்பா யிருவிழியும் நடுவிற்கூட்ட
ஆச்சரியஞ் சிவசோதி யண்ணல்ரூபம்
காச்சமரம் பழுத்ததுபோ லுனக்குயோகம்
கைவந்து நேர்ந்துதடா களங்கமில்லை
வாச்சுதப்பா கும்பகமும் மவுனந்தானும்
வாயாத அஷ்டசித்தும் மருவுந்தானே.

– கணநாதர் ஞானோபதேசம் 16 – கவி எண் 4.

தானான லோபமுதற் கோபம்போக்கு
சண்டாள ஆணுவமாம் மாயைபோக்கு
வேணான மண்ணாசை பொன்னினாசை
வெரும்பிலுக்காம் வல்லபையின் வீரத்தாசை
மானான வுடலாசை தீனியாசை
மக்கள்சுற்ற முறவின்முறை மயக்கத்தாசை
கோனான விவையெல்லாந் தள்ளிப்பார்த்தாற்
கூடுமடா மெய்ஞ்ஞான யோகந்தானே.

– கணநாதர் ஞானோபதேசம் 16 – கவி எண் 5.

**தானான லோபமுதற் கோபம்போக்கு –** இந்தத் துறையில் வருபவர்கள் பொருள் கொடாத லோபி என்று பெயர் எடுக்கக் கூடாது. பொருள் இருக்கிறவனுக்குத்தான் இந்தப் பேச்சு, இல்லாதவனுக்கு இந்தப் பேச்சில்லை. உழைப்பிற்கேற்ற கூலி தர வேண்டும். கூலியைக் குறைத்துக் கொடுத்தால் உழைத்தவன் மனம் நொந்து போவான். நியாயமான கூலியைத் தராமல், இப்படிக் கருமியாக இருக்கிறானே பாவி என்று வருத்தப்படுவான்.

யாராவது பொருள் வேண்டுமென்று கேட்டால், பொருள் இருந்தும் பொருள் கொடுக்காமல் இருந்தால் லோபி என்கிற பட்டத்தைப் பெறுவான். பொருள் இருந்தும் கொடுக்காத தன்மை இருக்கக் கூடாது.

இந்தத் துறைக்கு வர வேண்டுமென்றால், தயைசிந்தை இருக்க வேண்டும். தயைசிந்தை உள்ளவன்தான் இந்தத் துறைக்கு உரியவன். ஆகவே பொருள் மீது பற்று கொண்டு லோபித்தனமாக இருக்கக் கூடாது.

வெகுபேர் லோபிகளாக இருப்பதால்தான், பிறவி எடுத்துக் கொண்டேயிருக்கிறார்கள். தயைசிந்தை உள்ளவர்கள் அத்தனைபேரும் ஞானியாவார்கள். லோபிகள் அத்தனைபேரும் பிறவி எடுத்துக் கொண்டேயிருப்பார்கள்.

பிறருக்குக் கொடுக்கின்ற மனம் இருந்தாலே, அங்கே இறைத்தன்மை, தெய்வத்தன்மை இருக்கும். பொருள் இல்லாதவனைப் பற்றி பேச வேண்டிய அவசியமில்லை.

நூற்றுக்கு எண்பது சதம் மக்கள் தன்னிடம் உள்ள பொருளை இறுகப் பற்றிக் கொள்கிறான். இறுகப் பற்றிக் கொண்டதாலே தர்மசிந்தனை இவனுக்கு வரவில்லை. இவனுடைய ஆன்மாவிற்கு ஆதாயம் கிடைக்கவில்லை.

**ஈதல்; இசைபட வாழ்தல்; அதுஅல்லது**
**ஊதியம் இல்லை உயிர்க்கு.**

**– திருக்குறள் – புகழ் – குறள் எண் 231.**

**ஈதல் –** கொடுத்தல். அதன் மூலம் புகழ் உருவாகும். அது உயிருக்கு ஆக்கத்தைத் தரும்.

இந்தத் துறையில் ஒருவன் முன்னேற வேண்டுமென்றால், உடம்புதான் முக்கியம். உடம்பைக் காப்பாற்றிக் கொண்டால்தான், உடம்பின் துணை கொண்டு தர்மம் செய்ய முடியும். ஆனால் இந்த உடம்பு எத்தனை ஆண்டுகள் இருக்கும்? எண்பது அல்லது எண்பத்தைந்து வயது வரை இந்த உடம்பு இருக்கும். நன்றாக ஆரோக்கியமாக இருப்பவர்களுக்கு அறுபத்தைந்து வயது வரை, உடம்பில் திடம் இருக்கும். பிறகு நாளுக்கு நாள் நரைதிரை வந்து வீழ்ந்து போகும்.

இந்த உடம்பின் மூலமாக உழைத்துப் பொருள் திரட்டி, உடம்பு மூலமாகச் செய்யக் கூடிய தர்மம், உயிருக்குப் பாதுகாப்பு தரும். அதனால்தான் உயிருக்கு ஆக்கம் என்று சொன்னார். ஆசான் திருவள்ளுவர் யோகியல்லவா.

**அதுவல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு –** ஊதியம் என்பது ஆதாயம், லாபம். யோகிகள் உயிருக்கு ஆதாயம் தேடிக் கொண்டே இருப்பார்கள். பல ஜென்மத்திலே உயிருக்கு ஆதாயம் தேடினால்தான், ஆன்மா மோட்சம் பெறும். மோட்சம் பெறுவது ஆன்மாவா? உடம்பா? என்று கேட்டான். பல ஜென்மங்களிலே பல ஆன்மாக்கள் இவன் உயர்ந்தவன், புண்ணியவான், நல்லவன் என்று பாராட்டப் பாராட்ட பாராட்ட இந்த ஆன்மாவிற்கு ஆற்றல் வந்து கொண்டே இருக்கும்.

எல்லா ஆன்மாவும் கருமி, படுபாவி, லோபி என்று சொன்னால் இந்த ஆன்மா மாசுபட்டுக் கொண்டே இருக்கும்.

லோபித்தனம் இருந்தால் ஆன்மா மாசுபடும். பல பேர் இகழ்ந்து பேசுவான். உழைப்பிற்கேற்ற கூலி கொடுக்காமல் ஏமாற்றும்போதே இவன் லோபி என்கிற பட்டத்தை வாங்குகிறான். யாரேனும் பொருள் கேட்டால், இறுகப் பற்றிக் கொண்டு தராமல் இருப்பான். அதனால் லோபி என்கிற கெட்டப்பெயர் வரும். அதனால் ஆன்மாவிற்கு ஆக்கம் வராது. ஆகவே லோபித்தனம் இருக்கக் கூடாது. பொருளைத் தேடிப் புதைத்து வைக்கும் மாந்தர்களாக நீங்கள் இருக்கக் கூடாது. பொருளை இறுகப் பற்றிக் கொள்கின்றவன் அறியாமை உள்ளவன், தெளிவான அறிவில்லாதவன்.

ஆகவே ஆன்மா ஆக்கம் பெற என்ன செய்ய வேண்டும்? பிற உயிரினங்களுக்கு எப்படியாவது உதவி செய்து, அதன் மூலமாக அருள் என்று சொல்லப்பட்ட ஆன்ம வளர்ச்சியைப் பெற்றுக் கொள்வான். இவன் விஷயம் தெரிந்தவன். ஆகவே லோபித்தனத்தைப் போக்கிக் கொள்ள வேண்டும்.

பொருள் இருந்தால்தானே பிறருக்கு உதவ முடியும் என்று சொல்லக் கூடாது. கொடுக்கின்ற மனம் இருந்தால், தானே பொருள் வரும். பிற உயிர்களுக்கு உதவி செய்ய வேண்டும், பிறருக்குப் பசியாற்ற வேண்டுமென்கிற உணர்வு வந்தால், தானாகவே செல்வநிலை பெருகும். பொருளை இறுகப் பற்றிக் கொள்ள வேண்டுமென்று நினைத்தால், பொருள் பெருகாது.

முன் செய்த நல்வினையின் காரணமாகத்தான் செல்வம் சேரும். நல்வினை இல்லையென்றால் செல்வம் சேராது.

**இலர்பலர் ஆகிய காரணம் நோற்பார்**
**சிலர்பலர் நோலா தவர்.**

**– திருக்குறள் – தவம் – குறள் எண் 270.**

நோன்பு என்றால் தவம் என்று சொல்வார்கள். பெருவாரியான மக்கள் வறுமையில் இருப்பதற்கும், ஒரு சிலருக்கு மட்டும் செல்வநிலை பெருகுவதற்கும் முன் ஜென்மத்தில் செய்த தவமே காரணம். நோன்பு நோற்றான் என்றால் தவம் செய்தான் என்று அர்த்தம். நோன்பு என்பது விரதம் மேற்கொள்வது ஆகும். மெய்ப்பொருளை அடைய வேண்டுமென்ற உணர்வோடு விரதம் மேற்கொண்ட காரணத்தினாலே இவனுக்குச் செல்வம் சேரும். விரதம் மேற்கொள்ளாத பலருக்கு வறுமை இருக்கும் என்று சொல்கிறார்.

முன்செய்த நல்வினை காரணமாகச் செல்வம் இவனிடம் சேர்ந்திருக்கிறது. அதை இவன் இறுகப் பற்றிக் கொண்டதால், இவனுடைய உயிருக்கு ஆதாயம் கிடைக்காது. ஆகவே உயிருக்கு ஆதாயத்தைத் தேடிக் கொள்ள வேண்டும்.

உயிருக்கு ஆதாயத்தை சிறப்பறிவு உள்ள மக்களால்தான் தேடிக் கொள்ள முடியும். உயிருக்கு ஆதாயம் தேடுவது என்பது சின்ன விஷயமல்ல. அதற்கென்று பயிற்சியுள்ள மக்கள் இருப்பார்கள், அவர்களிடம் பயிற்சி எடுத்துக் கொண்டால்தான் உயிருக்கு ஆதாயத்தைத் தேட முடியும்.

ஏன் உயிருக்கு ஆதாயத்தைத் தேட வேண்டுமென்று சொன்னார்கள் என்றால், உடம்புக்கு அழிவு உண்டு. அழிவுள்ள இந்த உடம்புக்கு ஆதாயத்தைத் தேடக் கூடாது. ஆனால் உயிருக்கு அழிவு இல்லை. ஒரு மனிதன் இந்த உடம்பைக் கொண்டு, நல்ல பல செயல்களைச் செய்தால், உயிருக்கு ஆதாயம் வரும்.

**ஈதல்; இசைபட வாழ்தல்; அதுஅல்லது**
**ஊதியம் இல்லை உயிர்க்கு.**

**– திருக்குறள் – புகழ் – குறள் எண் 231.**

இது மிக உயர்ந்த கருத்து. புகழ் என்ற அதிகாரத்தில் முதல் குறளே இதுதான்.

**தானான லோபமுதற் கோபம்போக்கு** – கோபத்தைப் போக்கு என்று சொல்கிறார். சில சந்தர்ப்பத்தில் கோபம் வரலாம். ஆனால் எதற்கெடுத்தாலும் கோபம் வரக்கூடாது. அதுவே பிரச்சனையாக ஆகிவிடும்.

கோபம் வரும்போது தன்னை மறந்து விடுவான், அங்கே நிதானம் இருக்காது, சாந்தம் இருக்காது, முரண்பட்டு நடப்பான். அந்த ஜென்மத்திலேயே நட்பில்லாமல் போகும்.

**இறந்தார் இறந்தார் அனையர்; சினத்தைத்**
**துறந்தார் துறந்தார் துணை.**

**– திருக்குறள் – வெகுளாமை – குறள் எண் 310.**

இறந்தார் என்பதற்குக் கடத்தல் என்று பொருள்படும். கோபம் வந்தால் சொல் தடுமாறும். சினம் வந்தால் எதிரில் இருப்பவர் மனம் புண்படும்படி பேசுவார்கள். ஆனால் இவன் சாந்தமானவன்தான். கோபம் வந்த பிறகு, தனது நிதானம் தவறி, நிதானம் கடந்து பிறரைப் புண்படும்படி பேசுவான்.

**தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே**
**நாவினால் சுட்ட வடு.**

**– திருக்குறள் – அடக்கம் உடைமை – குறள் எண் 129.**

ஆறாத அளவிற்குப் பிறர் மனதைப் புண்படும்படி பேசுவான். அவன் சினம் கொண்டு பிறர் மனம் நொந்து போகும்படி பேசுவான். ஆன்மா என்று சொல்லப்பட்ட உயிர் இருந்தால்தான் மனம் இருக்கும். இவன் கடுமையான பேசிவிட்டானே என்று அந்த ஆன்மா நோகும்போது, சினம் கொண்டு பேசியவனின் ஆன்மா மாசுபட்டுவிடும். அதனால் சினம் இருக்கக் கூடாது என்கிறார் மகான் திருவள்ளுவர்.

இப்படி ஆராய்ந்து பார்க்கும்போது, இவனால் பிற ஆன்மா எந்தளவு அல்லற்படுகிறதோ, அந்த அளவிற்கு இவனுடைய ஆன்மா மாசுபடும். எந்தளவிற்கு பிற ஆன்மா இவனால் மகிழ்ச்சி அடைகிறதோ, அந்தளவிற்கு இவனுடைய ஆன்மா விளக்கம் பெறும். ஆகவே ஒருவனுடைய கருமித்தனத்தாலும், அளவு கடந்த சினத்தாலும் ஆன்மா மாசுபடும்.

**சண்டாள ஆணுவமாம் மாயைபோக்கு** – ஆணவம் இருக்கலாம், யாரையும் லட்சியம் செய்யாமல், பிறரை மதியாமல் இருப்பான். இவனுடைய செய்கை, பேச்சு, துடிப்பு இதையெல்லாம் அடுத்தவன் பார்த்துவிட்டு, வெளியே சொல்லமாட்டான். ஆனால் மனதிற்குள்ளே இவனெல்லாம் எப்படி உருப்படப் போகிறான் என்று எண்ணுவான். அந்த உணர்வு இவனைப் பாதிக்கும். சண்டாள ஆணுவங்கள் ஆகாது என்கிறார்.

அவனுடைய பேச்சு, பார்வை அடுத்தவனைக் கிடுகிடுவென நடுங்க வைக்கும். அந்தத் தன்மையை வெளிப்படுத்திக் காட்டுவான். இது மற்றவனுக்கு அருவெறுப்பாக இருக்கும். அந்த அருவெறுப்பு உடம்பு ஏற்படுத்துகிறதா, உயிர் ஏற்படுத்துகிறதா என்று பார்த்தால், இரண்டும் சேர்ந்துதான் செய்கிறது. ஒரு மனிதன் என்றாலே உடம்பும் உயிரும் சேர்ந்ததுதான். இப்படிப் பிறருக்கு அருவெறுப்பை ஏற்படுத்தினால், அதுவும் இவனைப் பாதிக்கும்.

**சண்டாள ஆணுவமாம் மாயைபோக்கு** – மாயை என்றால் என்ன? அநித்தியத்தை நித்தியம் என்று உணர்கின்ற மயக்க உணர்வு. நிலையில்லாத ஒன்றை நிலையென்று உணர்கின்ற மயக்கம். இந்தத் துறைக்கு மாயை ஆகாது. ஆகவே கருமித்தனம், கோபம், ஆணவம், நிலையில்லாததை நிலையென்று மயங்குகின்ற மயக்கம் இவையெல்லாம் ஆன்ம வளர்ச்சிக்குப் பாதிப்பை உண்டாக்கும், ஆன்ம லாபம் பெறுவதற்குத் தடையாக இருக்கும்.

**வேணான மண்ணாசை பொன்னினாசை** – இந்தத் துறையில் உள்ளவன் அரசனாகவும், அமைச்சனாகவும் இருப்பான். ஆனால் நாட்டம் இருக்காது. இது மிகப்பெரிய சாமர்த்தியம். வீடு கட்டியிருப்பான், மனைவி மக்களோடு கொஞ்சிக் குலாவிக் கொண்டிருப்பான், ஆனால் தொடர்பற்று இருப்பான்.

**நடுவுஇன்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றிக்**
**குற்றமும் ஆங்கே தரும்.**

**– திருக்குறள் – வெஃகாமை – குறள் எண் 171.**

ஏன் ஆசைப்படக் கூடாது என்று சொன்னால், நடுவு நிலைமை தவறக்கூடிய சூழ்நிலை வரும்.

மற்றவன் நிலத்தைக் கைப்பற்றுவதற்காக, அவனுக்கு எப்பொழுது பலகீனம் வரும் என்று காத்திருந்து அவனுடைய நிலத்தைக் கைப்பற்றுவான். நமக்கு வறுமை வரும்வரையில், காத்திருந்து நமது நிலத்தைக் கைப்பற்றிவிட்டானே பாவி! என்று நினைத்தால் அதுவும் உன்னைப் பாதிக்கும் என்கிறார். இந்தத் துறையில் வர வேண்டுமென்கிற விருப்பம் உள்ள மக்களுக்குத்தான் இப்படிச் சொல்லியிருக்கிறார். இந்தத் துறைக்கு வர விருப்பமில்லாதவர்கள் இதைப் பின்பற்றுவது அவரவர் விருப்பம். இல்லையென்றால் அவரவர் போக்கிலே சென்று கொண்டிருக்கலாம்.

**வெரும்பிலுக்காம் வல்லபையின் வீரத்தாசை** – பிலுக்கு என்றால் நடிப்பு, பசப்புதல் என்று அர்த்தம். அருள், தவம் என்பது கடுகளவிற்குக் கூட இவனிடம் இருக்காது. ஆனால் தவம் மிகுதியாக இருப்பது போன்று பாவலா செய்வான், பசப்பிக் கொண்டிருப்பான். என்னே திருவருள் என்பான், ஆனால் அவனிடம் ஒன்றும் இருக்காது. கால் பைசாவிற்குக் கூடப் பிரயோஜனம் இவனால் இருக்காது. இந்தப் புவனத்தையெல்லாம் அவன்தான் ஆட்டிப்படைக்கிறான், அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்று பசப்புவான். இதுவும் இந்தத் துறைக்கு ஆகாது.

எந்த அளவிற்கு அந்தரங்கப் பக்தி செலுத்துகிறானோ, அந்தளவிற்குதான் இந்தத் துறையில் ஆன்மா ஆக்கத்தைப் பெற முடியும். ஆனால் தவம் செய்யாமலேயே, தவம் செய்வது போன்ற ஒரு மயக்கத்தில் இருந்தால், அவனிடம் இந்தக் குணக்கேடுகள் இருக்கத்தான் செய்யும்.

லோபித்தனம், சினம், ஆணவம் போன்ற பல்வேறு வகையான தீய சக்திகள் இருப்பதற்குக் காரணம் என்னவென்றால், நிலையில்லாததை நிலையென்று எண்ணுகின்ற மயக்கம்தான். இதெல்லாம் இந்தத் துறைக்கு ஆகாது என்கிறார்.

ஞானிகளைப் பூஜை செய்யும்போது, என்னிடம் உள்ள கருமித்தனம் நீங்க வேண்டும், யாரேனும் பொருள் கேட்டால் கொடுப்பதற்குரிய பரிபக்குவம் வேண்டும், அதுமட்டுமல்ல பொருள் என்னிடம் சேர வேண்டும், சேர்ந்த பொருளை யாரேனும்

கேட்டால் தடையில்லாமல் கொடுப்பதற்குரிய பரிபக்குவம் வேண்டும், கனிவான சிந்தை வேண்டுமென்று கேட்க வேண்டும். முன் செய்த வினைப்பயனால் அடிக்கடி கோபம் எனக்கு வருகிறது, அது மாயை என்பதை நான் உணர வேண்டும்.

கோபத்திற்குப் பச்சை நிறமோ, வெள்ளை நிறமோ, சிகப்பு நிறமோ கிடையாது. கோபம் என்பது அளவுகடந்த உணர்ச்சி. கோபத்தினால் வாழ்க்கை பாதிக்கிறது, நட்பு பாதிக்கிறது.

கோபம் என்னுடைய வாழ்க்கைக்குத் தடையாக இருக்கிறது. இந்தச் சினம் என்னுடைய முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கிறது. அந்தச் சினம் நீங்கவும், வராமலிருக்கவும், லோபித்தனம் இல்லாதிருக்கவும் நீர்தான் எனக்கு அருள் செய்ய வேண்டுமென்றும் ஞானிகளைக் கேட்டுக் கொள்ள வேண்டும்.

பிறருக்கு உதவி செய்வதற்கு என்னிடம் பொருளில்லையே என்பான். பிறருக்கு உதவி செய்ய வேண்டுமென்கிற சிந்தை வந்தாலே போதும், அந்தச் சிந்தைக்கு எல்லாம்வல்ல இயற்கை உனக்கு உதவி செய்யும்.

நிலையில்லாத பொருளை நிலையென்று மயங்குகின்ற மயக்கம் நீங்க வேண்டும். ஞானிகள் அத்தனைபேரும் இப்படிப்பட்ட குணக்கேட்டிலிருந்து விடுபட்ட மக்கள்.

குணக்கேட்டிலிருந்து விடுபடுவதற்குத் தன்னால் முடிந்தளவிற்குப் பிறருக்கு உதவி செய்ய வேண்டும். ஒன்று பொருளால் உதவி செய்தல், ஒன்று சிந்தையால் உதவி செய்தல், சொல்லால் உதவி செய்தல், இன்னொன்று உடலால் உதவி செய்தல் போன்ற வழிகளால் மட்டும்தான் உதவி செய்ய முடியும்.

யாரேனும் உதவி என்று இவனிடம் கேட்டால், கொடுப்பதற்கு நம்மிடம் பொருள் இல்லையே என்று வருந்துவான். பொருள் கேட்பவன் நல்லவன்தான் நிச்சயமாகத் திருப்பிக் கொடுத்துவிடுவான். ஆனால் நம்மிடம் இல்லையே என்று வருந்துவான். தனக்குத் தெரிந்த நண்பர்களிடம் அவனை அழைத்துச் சென்று, ‘‘இவர் எனது நண்பர். அவருடைய மகளுக்குத் திருமணம் வைத்து விட்டார், கையில் பொருள் இல்லாமல் தடுமாறுகிறார், என்னிடம் உதவி கேட்டார். என்னிடம் பொருள் இல்லை. என்ன செய்வது என்று புரியவில்லை? நீங்கள்தான் கொடுத்து உதவி செய்ய வேண்டும்’’ என்று கேட்கிறான். தன்னிடம் பொருள் இல்லையென்றாலும், தன் நண்பர்களிடம் எப்படியாவது பொருள் வாங்கி அவனுடைய கஷ்டத்தைத் தீர்த்து வைக்க வேண்டுமென்று எண்ணுவான்.

‘‘என்னுடைய நண்பன் நல்லவன்தான், உயர்ந்த பண்புள்ளவன், பொருள் இல்லாமல் வறுமையில் தடுமாறுகிறான், அவனுடைய கடன் பிரச்சனையைத்

தீர்த்து வைக்க வேண்டும்'' என்று ஆசான் அகத்தீசரை பூஜை செய்து வேண்டுகிறான். இப்படி ஆசானிடம் கேட்டால் இவனுக்காக அவனுடைய பிரச்சனையை ஆசான் தீர்த்து வைப்பார். தன்னை வணங்கியவனுக்காக அவனுடைய பிரச்சனையைத் தீர்த்து இவனுக்குப் பெருமையைத் தேடித் தருவார்கள். இது ஆன்மாவிற்கு ஆக்கத்தை உண்டாக்கும்.

மிகுதியான பொருளைத் தலைவன் கொடுத்து, கனிவான சிந்தனையைக் கொடுத்து, தர்மத்தைச் செய்ய வைப்பான். தர்மத்தை நாளுக்குநாள் வளர்த்து இவனை உயர்த்துவான். ஆசானைப் பூஜை செய்யசெய்ய, குணக்கேட்டிலிருந்து விடுபடச் செய்து, மேலும்மேலும் செல்வத்தைக் கொடுத்து, தர்மத்தைச் செய்ய வைப்பார்கள் ஞானிகள். இப்படிப்பட்ட வாய்ப்பு பூஜை செய்வதால் உண்டாகும்.

**மானான வுடலாசை தீனியாசை**
**மக்கள்சுற்ற முறவின்முறை மயக்கத்தாசை**

யோகப்பயிற்சி செய்கின்ற மக்களுக்கு, கைகால் நரம்பெல்லாம் புடைத்துக் கொண்டிருக்கும். இதயத்தைக் காற்று அழுத்தும், திடீரென்று மயக்கம் வரும். இந்த உடம்பிற்கு எந்த நேரத்தில் என்ன ஏற்படுமோ? என்ற பயம் இருக்கும். சரி, நாம் இறந்து போய்விடுவோம் என்ற நிலைமைக்கு வந்துவிடுவான். இந்த எண்ணம் வந்தாலே நாம் தோற்றுவிடுவோம். இந்த உடம்பு என்றைக்காவது ஒரு நாள் சாகப் பிறந்தது. துன்பம் வந்தால் வரட்டும், நடக்கிறது நடக்கட்டும் என்ற உணர்வு வந்தாலன்றி இந்தத் துறைக்கு வர முடியாது.

யோகப்பயிற்சி செய்கின்ற மக்களுக்கெல்லாம் இந்தத் துன்பம் வரத்தான் செய்யும். உள்கருவி கரணங்களைக் குளிர்வதற்காகப் பல்வேறு வகையான துன்பங்கள் வந்து கொண்டே இருக்கும். துன்பம் வரும்போது துவண்டால் அடுத்துப் போகக் கூடிய காரியங்கள் தடைபடும். ஆகவே உடம்பு மீது ஆசையிருக்கக் கூடாது. என்றைக்காவது ஒரு நாள் சாகத்தான் போகிறோம், சரி இப்படித் துன்பப்பட்டாவது இறந்து போவோம் என்ற எண்ணம் இருக்க வேண்டும்.

இந்த உடம்பு என்றைக்காவது ஒரு நாள் சாகத்தான் போகிறது. நாம் இந்தத் துறையைப் பின்பற்றிச் சென்றாலும், சாவு வரத்தான் போகிறது, பின்பற்றாவிட்டாலும் சாவு வரத்தான் போகிறது. இதிலேயே சாவோம், நடக்கிறது நடக்கட்டும் என்று பின்பற்றினாலன்றி இந்தத் துறைக்கு வர முடியாது.

காலையில் இருந்து மாலைக்குள்ளே பலமுறை நாம் செத்து போய்விடுவோமோ என்ற எண்ணம் இந்தத் துறையில் இருப்பவர்களுக்கு

வந்து கொண்டே இருக்கும். அந்த அளவிற்குத் துன்பம் இருக்கும். மூச்சு விட முடியாத அளவிற்கு மூச்சுக்காற்று அடைக்கும். கைகால்களில் பிடிக்கும், வாதம் வந்து விடுமோ என்று பயப்படுவான். இதையே நினைத்துக் கொண்டிருப்பான். கடைசி முடிவு வாதம் வந்தாலும் சரி, நெஞ்சை அழுத்தினாலும் சரி, செத்தாலும் சரி இதிலிருந்து விடுபட முடியாது என்ற எண்ணம் இருந்தால், அவன் சத்குரு ஆவான்.

இல்லறத்தானுக்கு இருதய நோய் வருமேயானால், மருத்துவர் மருந்துகள் கொடுத்துச் சரி செய்வார். வாய்வு சம்பந்தப்பட்ட நோய் வந்தால் ஊசி போட்டு, மருந்து கொடுத்துச் சரிப்படுத்த முடியும். ஆனால் இந்தத் துறைக்கு மருந்தே கிடையாது. இந்தத் துறையில் வருபவர்கள், மாத்திரையோ மருந்தோ சேர்க்கவே கூடாது. துன்பத்தை ஏற்றுக் கொண்டு அனுபவிக்கத்தான் வேண்டும். ஆகவே உடல் மீது ஆசை இருக்கக் கூடாது.

செத்துப்போய் விடுவேனோ என்று எண்ணினால், செத்து போ என்று சொல்வார்கள். துன்பம் என்று நினைத்தால் செத்து போ என்பார்கள். துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருந்தால் தேறிக் கொள்வாய். இதை நீ செய்யாவிட்டால் என்னாகும்? எப்படியும் சாகத்தான் போகிறாய். அதற்கு இப்படி நீ சாவு என்பார்கள். இதுதான் இந்தத் துறைக்கு மிக முக்கியமான லட்சியம். மானான வுடலாசை தீர வேண்டும்.

**மானான வுடலாசை தீனியாசை** – தினமும் பூஜை செய்தால்தான் இவன் சாப்பிடுவதைக் கவனிப்பார்கள். இந்த உடம்பிற்குத் தேவையான உஷ்ணத்திற்குரிய உணவைச் சேர்த்துக் கொண்டே வருவான். இவனுக்கு வாத, பித்த, சிலேத்துமம் தெரியாது. இவனுடைய வாத, பித்த, சிலேத்துமத்தை பொதிகையிலிருந்தே ஆசான் கவனித்துக் கொண்டிருப்பார்.

இவனுடைய உடல் வெப்பம் இன்றைக்குக் குறைகிறது, இவன் எந்தெந்த உணவு சாப்பிட வேண்டும் என்பது இவனுக்குத் தெரியாது. இவன் சாப்பிடும்போது பல்லி மூலமாகவோ, ஆந்தை மூலமாகவோ ஆசான் பொதிகையிலிருந்து அவனுக்கு உணர்த்தி அவனை இயக்குவார்கள். என்னென்ன உணவைச் சேர்க்கலாம், சேர்க்கக் கூடாது, எந்த அளவு சேர்க்கலாம் என்பதை அறிவுறுத்துவார்கள். பூஜை செய்தால்தான் ஆசான் நம்மைக் கண்காணிப்பார்.

நமது உடம்பின் இயல்பு, எவ்வளவு உணவு சேர்க்க வேண்டும், எந்தெந்த உணவு சேர்க்க வேண்டுமென்பது நமக்குத் தெரியாது. எல்லாம் அவர்களுடைய கருணையினால்தான் நாம் அறிய முடியும்.

ஆகவே தீனியாசை, உடம்பு ஆசை, மற்ற சுற்றத்து ஆசை இருக்கக் கூடாது. மனைவி மக்கள் இருக்க வேண்டும், ஆனால் சாரக் கூடாது.

திருமணம் செய்தவன் வெகுவிரைவிலே ஞானியாவான். திருமணம் செய்யாதவன் தட்டு தடுமாறுவான். ஏன் அந்த வார்த்தையைச் சொல்கிறோம், துறவு மேற்கொள்ளக் கூடாது என்பதற்காக அல்ல. துறவு என்பது சார்ந்தும் சாராது இருப்பதுதான். மனைவிமக்களை விட்டுவிட்டு காட்டுக்குப் போவது துறவு அல்ல.

இல்லறத்தான் காலை மாலை பூஜை செய்வான். இப்படிப் பதினைந்து வருடம் பூஜை செய்வான். இந்தப் பதினைந்து வருடமும் காட்டில் இருந்தால், இவனுக்குத் தேவையான உணவு, உடை, உறைவிடம் மற்ற சுற்றுப்புறச் சூழ்நிலை அமையாது. ஆகவே இல்லறத்தானுக்குத்தான் இந்த வாய்ப்பு கிடைக்கும். இவன் இல்லறத்தில் இருந்தபோதும், முழுமையாக அதில் ஈடுபடக் கூடாது. இல்லறத்தில் ஈடுபடலாம், நோய்நொடி வரும் போது, துன்பம் வரும்போது உதவி செய்து பிரச்சனைகளைத் தீர்க்கலாம். ஆனால் அதைக் கண்டு சோர்வடையக் கூடாது. இதையெல்லாம் விட்டுவிட்டு ஓடுவதல்ல. இதெல்லாம் நுணுக்கமான வார்த்தை.

**கோனான விவையெல்லாந் தள்ளிப்பார்த்தாற்** – லோபித்தனம், சினம், அகங்காரம், பசப்புதல் போன்ற பல்வேறு வகையான குணக்கேடுகளை நீக்கினால்தான் இந்தத் துறைக்கு வரலாம் என்று மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார்.

**கோனான விவையெல்லாந் தள்ளிப்பார்த்தாற்**
**கூடுமடா மெய்ஞ்ஞான யோகந்தானே.**

கோன் என்பது எதுகைக்காகச் சொல்லியிருக்கிறார். இதுபோன்று வகுத்துக் கொடுத்த பாதைக்கு வந்தால்தான் இந்தத் துறைக்கு உரியவனாகிறான்.

இதுநேரம் வரை நாங்கள் சொன்ன கருத்துகளை நீங்கள் தொடர்ந்து கேட்டு பின்பற்றி வர வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். மகான் கணநாதர் அருளிய ஞானோபதேசம் 16ல் உள்ள சில பாடல்களுக்கு விளக்கத்தை பார்த்தோம். தொடர்ந்து நாளையும் பார்ப்போம் என்று சொல்லி முடிக்கிறேன் வணக்கம்.

ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம

............................

உ

சிவமயம்

தினசரி பாராயணம் – செவ்வாய்கிழமை

# மகான் மாணிக்கவாசகர் அருளிய போற்றித் திருஅகவல்

திருச்சிற்றம்பலம்

நான்முகன் முதலா வானவர் தொழுதெழ
ஈரடி யாலே மூவுல களந்து
நாற்றிசை முனிவரும் ஐம்புலன் மலரப்
போற்றிசெய் கதிர்முடித் திருநெடு மாலன்று
அடிமுடி யறியும் ஆதர வதனிற்

கடுமுரண் ஏன மாகி முன்கலந்து
ஏழ்தலம் உருவ இடந்து பின்னெய்த்தும்
ஊழி முதல்வ சயசய வென்று
வழுத்தியுங் காணா மலரடி யிணைகள்
வழுத்துதற் கெளிதாய் வார்கடல் உலகினில்

யானை முதலா எறும்பீ றாய
ஊனமில் யோனியி னுள்வினை பிழைத்தும்
மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்து
ஈனமில் கிருமிச் செருவினிற் பிழைத்தும்
ஒருமதித் தான்றியின் இருமையிற் பிழைத்தும்

இருமதி விளைவின் ஒருமையிற் பிழைத்தும்
மும்மதி தன்னுள் அம்மதம் பிழைத்தும்
ஈரிரு திங்களிற் பேரிருள் பிழைத்தும்
அஞ்சு திங்களின் முஞ்சுதல் பிழைத்தும்
ஆறு திங்களின் ஊறலர் பிழைத்தும்

ஏழு திங்களில் தாழ்புவி பிழைத்தும்
எட்டுத் திங்களிற் கட்டமும் பிழைத்தும்
ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும்
தக்க தசமதி தாயொடு தான்படும்
துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்

ஆண்டுகள் தோறும் அடைந்தஅக் காலை
ஈண்டியும் இருத்தியும் எனைப்பல பிழைத்தும்
காலை மலமொடு கடும்பகற் பசிநிசி
வேலை நித்திரை யாத்திரை பிழைத்தும்
கருங்குழற் செவ்வாய் வெண்ணகைக் கார்மயில்

ஒருங்கிய சாயல் நெருங்கியுள் மதர்த்துக்
கச்சற நிமிர்ந்து கதிர்த்து முன்பணைத்து
எய்த்திடை வருந்த எழுந்து புடைபரந்து
ஈர்க்கிடை போகா இளமுலை மாதர்தம்
கூர்த்த நயனக் கொள்ளையிற் பிழைத்தும்

பித்த வுலகர் பெருந்துறைப் பரப்பினுள்
மத்தக் களிறெனும் அவாவிடைப் பிழைத்தும்
கல்வி யென்னும் பல்கடற் பிழைத்தும்
செல்வ மென்னும் அல்லலிற் பிழைத்தும்
நல்குர வென்னுந் தொல்விடம் பிழைத்தும்

புல்வரம் பாய பலதுறை பிழைத்தும்
தெய்வ மென்பதோர் சித்தமுண் டாகி
முனிவி லாததோர் பொருளது கருதலும்
ஆறு கோடி மாயா சத்திகள்
வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின

ஆத்தம் ஆனார் அயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும்பு ஏறினர்
சுற்ற மென்னுந் தொல்பசுக் குழாங்கள்
பற்றி யழைத்துப் பதறினர் பெருகவும்
விரதமே பரமாக வேதியரும்

சரத மாகவே சாத்திரங் காட்டினர்
சமய வாதிகள் தத்தம் மதங்களே
அமைவ தாக அரற்றி மலைந்தனர்
மிண்டிய மாயா வாத மென்னும்
சண்ட மாருதஞ் சுழித்தடித் தாஅர்த்து

உலோகா யதனெனும் ஒண்திறற் பாம்பின்
கலாபே தத்த கடுவிட மெய்தி
அதிற்பெரு மாயை யெனைப்பல சூழவுந்
தப்பா மேதாம் பிடித்தது சலியாத்
தழலது கண்ட மெழுகது போலத்

தொழுதுள முருகி அழுதுடல் கம்பித்து
ஆடியும் அலறியும் பாடியும் பரவியும்
கொடிறும் பேதையுங் கொண்டது விடாதெனும்
படியே யாகிநல் லிடையறா அன்பில்
பசுமரத் தாணி அறைந்தாற் போலக்

கசிவது பெருகிக் கடலென மறுகி
அகங்குழைந் தனுகுல மாய்மெய் விதிர்த்துச்
சகம்பேய் என்று தம்மைச் சிரிப்ப
நாணது வொழிந்து நாடவர் பழித்துரை
பூணது வாகக் கோணுத லின்றிச்

சதுரிழந் தறிமால் கொண்டு சாரும்
கதியது பரமா  அதிசய மாகக்
கற்றா மனமெனக் கதறியும் பதறியும்
மற்றோர் தெய்வங் கனவிலும் நினையாது
அருபரத் தொருவன் அவனியில் வந்து

குருபர னாகி யருளிய பெருமையைச்
சிறுமையென் றிகழாதே திருவடி யிணையைப்
பிறிவினை யறியா நிழலது போல
முன்பின் னாகி முனியா தத்திசை
என்புநைந் துருகி நெக்குநெக் கேங்கி

அன்பெனும் ஆறு கரையது புரள
நன்புலன் ஒன்றி நாதவென் றரற்றி
உரைதடு மாறி உரோமஞ் சிலிர்ப்பக்
கரமலர் மொட்டித் திருதயம் மலரக்
கண்களி கூர நுண்துளி அரும்பச்

சாயா அன்பினை நாடொறுந் தழைப்பவர்
தாயே யாகி வளர்த்தனை போற்றி
மெய்தரு வேதிய னாகி வினைகெடக்
கைதர வல்ல கடவுள் போற்றி
ஆடக மதுரை அரசே போற்றி

கூடல் இலங்கு குருமணி போற்றி
தென்தில்லை மன்றினுள் ஆடி போற்றி
இன்றெனக் காரமு தானாய் போற்றி
மூவா நான்மறை முதல்வா போற்றி
சேவார் வெல்கொடிச் சிவனே போற்றி

மின்னா ருருவ விகிர்தா போற்றி
கல்நார் உரித்த கனியே போற்றி
காவாய் கனகக் குன்றே போற்றி
ஆஆ என்றனக் கருளாய் போற்றி
படைப்பாய் காப்பாய் துடைப்பாய் போற்றி

இடரைக் களையும் எந்தாய் போற்றி
ஈச போற்றி இறைவ போற்றி
தேசப் பளிங்கின் திரளே போற்றி
அரசே போற்றி அமுதே போற்றி
விரைசேர் சரண விகிர்தா போற்றி

வேதி போற்றி விமலா போற்றி
ஆதி போற்றி அறிவே போற்றி
கதியே போற்றி கனியே போற்றி
நதிசேர் செஞ்சடை நம்பா போற்றி
உடையாய் போற்றி உணர்வே போற்றி

கடையேன் அடிமை கண்டாய் போற்றி
ஐயா போற்றி அணுவே போற்றி
சைவா போற்றி தலைவா போற்றி
குறியே போற்றி குணமே போற்றி
நெறியே போற்றி நினைவே போற்றி

வானோர்க் கரிய மருந்தே போற்றி
ஏனோர்க் கெளிய இறைவா போற்றி
மூவேழ் சுற்றம் முரணுறு நரகிடை
ஆழா மேயருள் அரசே போற்றி
தோழா போற்றி துணைவா போற்றி

வாழ்வே போற்றியென் வைப்பே போற்றி
முத்தா போற்றி முதல்வா போற்றி
அத்தா போற்றி அரனே போற்றி
உரையுணர் விறந்த ஒருவ போற்றி
விரிகடல் உலகின் விளைவே போற்றி

அருமையில் எளிய அழகே போற்றி
கருமுகி லாகிய கண்ணே போற்றி
மன்னிய திருவருள் மலையே போற்றி
என்னையும் ஒருவ னாக்கி இருங்கழல்
சென்னியில் வைத்த சேவக போற்றி

தொழுதகை துன்பந் துடைப்பாய் போற்றி
அழிவிலா ஆனந்த வாரி போற்றி
அழிவதும் ஆவதுங் கடந்தாய் போற்றி
முழுவதும் இறந்த முதல்வா போற்றி
மானேர் நோக்கி மணாளா போற்றி

வானகத் தமரர் தாயே போற்றி
பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை யிரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி

வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி
அளிபவர் உள்ளத் தமுதே போற்றி
கனவிலுந் தேவர்க் கரியாய் போற்றி
நனவிலும் நாயேற் கருளினை போற்றி
இடைமரு துறையும் எந்தாய் போற்றி

சடையிடைக் கங்கை தரித்தாய் போற்றி
ஆரூ ரமர்ந்த அரசே போற்றி
சீரார் திருவை யாறா போற்றி
அண்ணா மலையெம் அண்ணா போற்றி
கண்ணார் அமுதக் கடலே போற்றி

ஏகம் பத்துறை யெந்தாய் போற்றி
பாகம் பெண்ணுரு வானாய் போற்றி
பராய்த்துறை மேவிய பரனே போற்றி
சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி
மற்றோர் பற்றிங் கறியேன் போற்றி

குற்றா லத்தெங் கூத்தா போற்றி
கோகழி மேவிய கோவே போற்றி
ஈங்கோய் மலையெம் எந்தாய் போற்றி
பாங்கார் பழனத் தழகா போற்றி
கடம்பூர் மேவிய விடங்கா போற்றி

அடைந்தவர்க் கருளும் அப்பா போற்றி
இத்தி தன்னின் கீழிரு மூவர்க்கு
அத்திக் கருளிய அரசே போற்றி
தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி

ஏனக் குருளைக் கருளினை போற்றி
மானக் கயிலை மலையாய் போற்றி
அருளிட வேண்டும் அம்மான் போற்றி
இருள்கெட அருளும் இறைவா போற்றி
தளர்ந்தே னடியேன் தமியேன் போற்றி

களங்கொளக் கருத அருளாய் போற்றி
அஞ்சே லென்றிங் கருளாய் போற்றி
நஞ்சே அமுதா  நயந்தாய் போற்றி
அத்தா போற்றி ஐயா போற்றி
நித்தா போற்றி நிமலா போற்றி

பத்தா போற்றி பவனே போற்றி
பெரியாய் போற்றி பிரானே போற்றி
அரியாய் போற்றி அமலா போற்றி
மறையோர் கோல நெறியே போற்றி
முறையோ தரியேன் முதல்வா போற்றி

உறவே போற்றி உயிரே போற்றி
சிறவே போற்றி சிவமே போற்றி
மஞ்சா போற்றி மணாளா போற்றி
பஞ்சே ரடியாள் பங்கா போற்றி
அலந்தேன் நாயேன் அடியேன் போற்றி

இலங்கு சுடரெம் ஈசா போற்றி
கவைத்தலை மேவிய கண்ணே போற்றி
குவைப்பதி மலிந்த கோவே போற்றி
மலைநா டுடைய மன்னே போற்றி
கலையா ரரிகே சரியாய் போற்றி

திருக்கழுக் குன்றிற் செல்வா போற்றி
பொருப்பமர் பூவணத் தரனே போற்றி
அருவமும் உருவமும் ஆனாய் போற்றி
மருவிய கருணை மலையே போற்றி
துரியமும் இறந்த சுடரே போற்றி

தெரிவரி தாகிய தெளிவே போற்றி
தோளா முத்தச் சுடரே போற்றி
ஆள் ஆனவர்கட்கு அன்பா போற்றி
ஆரா அமுதே அருளே போற்றி
பேரா யிரமுடைப் பெம்மான் போற்றி

தாளி அறுகின் தாராய் போற்றி
நீளொளி யாகிய நிருத்தா போற்றி
சந்தனச் சாந்தின் சுந்தர போற்றி
சிந்தனைக் கரிய சிவமே போற்றி
மந்திர மாமலை மேயாய் போற்றி

எந்தமை உய்யக் கொள்வாய் போற்றி
புலிமுலை புல்வாய்க் கருளினை போற்றி
அலைகடல் மீமிசை நடந்தாய் போற்றி
கருங்குரு விக்கன் றருளினை போற்றி
இரும்புலன் புலர இசைந்தனை போற்றி

படியுறப் பயின்ற பாவக போற்றி
அடியொடு நடுவீ றானாய் போற்றி
நரகொடு சுவர்க்கம் நானிலம் புகாமல்
பரகதி பாண்டியற் கருளினை போற்றி
ஒழிவற நிறைந்த ஒருவ போற்றி

செழுமலர்ச் சிவபுரத் தரசே போற்றி
கழுநீர் மாலைக் கடவுள் போற்றி
தொழுவார் மையல் துணிப்பாய் போற்றி
பிழைப்பு வாய்ப்பொன் றறியா நாயேன்
குழைத்தசொன் மாலை கொண்டருள் போற்றி

புரம்பல எரித்த புராண போற்றி
பரம்பரஞ் சோதிப் பரனே போற்றி
போற்றி போற்றி புயங்கப் பெருமான்
போற்றி போற்றி புராண காரண
போற்றி போற்றி சயசய போற்றி

திருச்சிற்றம்பலம்

---

குருவருள்வேண்டி . . .

மரு. இரா.விஜயகுமார் – இரா.மாதவன்

**அன்னை மருத்துவமனை,**
**துறையூர்.**

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அருளுகின்ற மாத இதழ்

# ஞானத்திருவடி

கடவுளால் இயற்றப்பட்ட நூல். உலக மக்கள் துன்பமில்லாமல் வாழவும், ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ளவும், ஞானிகள் வழிமுறைகளை தொகுத்து கொடுத்துள்ளார்கள். எனவே இந்த நூலை படித்து மற்றவர்களுக்கு வாங்கி கொடுப்பது மிகப்பெரிய புண்ணியம் ஆகும். ஞானத்திருவடி நூலிற்கு சந்தா செலுத்துதல், சந்தாவை புதுப்பித்தல் மற்றும் ஞானத்திருவடி நூலை வாங்கி கொடுப்பதற்கும் உங்கள் அருகாமையில் உள்ளவர்களிடம் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

| | | |
|---|---|---|
| 1. | சரவணன், மண்ணச்சநல்லூர், திருச்சி | 84289 05393 |
| 2. | கோவை – | |
| | பிரபு, ஒண்டிபுதூர் | 90035 67548 |
| | கிருஷ்ணமூர்த்தி, இடையர்வீதி | 98947 49339 |
| | தெய்வசேனா, வடவள்ளி | 77088 93843 |
| | ஸ்ரீதர், காட்டூர் | 94872 24035 |
| | கோவிந்தராஜ், துரை டிரைவிங், ஸ்கூல், சூலூர் | 98651 94194 |
| 3. | சென்னை – | |
| | ரெங்கநாதன், வடபழனி | 96770 17170 |
| | ஜெயராஜ், அம்பத்தூர் | 94441 75629 |
| | முருகவேல், அம்பத்தூர் | 95660 54957 |
| | ராமச்சந்திரன், மேடவாக்கம் | 87544 40544 |
| | ரகுபதி, திருவொற்றியூர் | 99622 32314 |
| | சௌந்தரராஜன், மீஞ்சூர் | 98406 24169 |
| 4. | மோகன் கென்னடி, விருதுநகர், மதுரை | 98421 01357 |
| 5. | கோபாலகிருஷ்ணன், மணப்பாறை | 80121 63639 |
| 6. | பழனிச்சாமி, கரூர் | 90955 16455 |
| 7. | பாஸ்கர், தூத்துக்குடி | 98650 84856 |
| 8. | சசிக்குமார், மார்த்தாண்டம், நாகர்கோவில் | 94893 93303 |
| 9. | சரவணன், திருநெல்வேலி | 93677 55008 |
| 10. | கோபிநாத், சேலம் | 78713 99100 |
| 11. | பாண்டுரங்கன், திருவண்ணாமலை | 95004 74192 |
| 12. | பாபு, தஞ்சாவூர் | 97891 66458 |
| 13. | சிவசங்கரன், ராமநாதபுரம் | 98426 23117 |
| 14. | யூவி, நாமக்கல் | 99651 29647 |
| 15. | பிரேம், ஈரோடு | 76674 37673 |
| 16. | செல்லத்துரை, சித்தோடு | 90957 45489 |
| 17. | ராஜேந்திரன், வேதாரண்யம் | 94885 32616 |

முருகப்பெருமான் துணை

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள் தலைமையில்

## புரட்டாசி பௌர்ணமி விழா

நாள் : **விகாரி ஆண்டு, புரட்டாசி மாதம் 26ஆம் தேதி,**
**13.10.2019 - ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி அளவில்**

இடம் : **ஓங்காரக்குடில், துறையூர்.**

**அனைவரும் வருக!** நிகழ்ச்சி நிரல் **குருவருள் பெறுக!!**

காலை 6.00 மணி – **சரவண ஜோதி தரிசனம்** மற்றும் **வழிபாடு**
காலை 6.30 மணி – **அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணம்**
காலை 9.00 மணி – **தவத்திரு குருநாதர் அவர்கள் தீட்சை வழங்குதல்**
காலை 9.30 மணி – **சித்தர்கள் வழிபாடு**
பகல் 12 மணி – **தவத்திரு குருநாதர் அவர்களின் சிறப்பு அருளுரை**

காலை 8 மணி முதல் மதியம் 3 மணி வரை
ஞானிகளை பூஜித்த அருட்பிரசாதம் (அன்னதானம்) வழங்கப்படும்.

நிகழ்ச்சிகளின் உபயதாரர் :
**D.ராம்குமார், D.P.சுதாகர்,** கோவை. **D.ரெங்கநாதன்,** சென்னை.

முருகப்பெருமான் துணை

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள் தலைமையில்

## ஐப்பசி பௌர்ணமி விழா

நாள் : **விகாரி ஆண்டு, ஐப்பசி மாதம் 26ஆம் தேதி,**
**12.11.2019 - செவ்வாய்க்கிழமை காலை 10 மணி அளவில்**

இடம் : **ஓங்காரக்குடில், துறையூர்.**

**அனைவரும் வருக!** நிகழ்ச்சி நிரல் **குருவருள் பெறுக!!**

காலை 6.00 மணி – **சரவண ஜோதி தரிசனம்** மற்றும் **வழிபாடு**
காலை 6.30 மணி – **அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணம்**
காலை 9.00 மணி – **தவத்திரு குருநாதர் அவர்கள் தீட்சை வழங்குதல்**
காலை 9.30 மணி – **சித்தர்கள் வழிபாடு**
பகல் 12 மணி – **தவத்திரு குருநாதர் அவர்களின் சிறப்பு அருளுரை**

காலை 8 மணி முதல் மதியம் 3 மணி வரை
ஞானிகளை பூஜித்த அருட்பிரசாதம் (அன்னதானம்) வழங்கப்படும்.

நிகழ்ச்சிகளின் உபயதாரர் :
**D.ராம்குமார், D.P.சுதாகர்,** கோவை. **D.ரெங்கநாதன்,** சென்னை.

# குருநாதருக்கு முருகப்பெருமான் அருளிய ஆசி நூல்

முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் சுப்பிரமணியர் அருளிய ஞான ஆசி காண்டம்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

01.09.2019

1. ஓங்கார சக்தியே ஞானதேசிகா
ஓங்காரக் குடில் வாழும் ஆறுமுக அரங்கா
ஓங்கார ஓசைபட சுப்பிரமணியர் யானும்
ஓங்காரனுக்கு ஞான ஆசி பலனை உரைப்பேன்
2. உரைக்கவே எழுபிறப்பும் என்னருளால்
உயர்ஞானம் பெற்று வந்த அரங்கா
குறைவின்றி அடைந்த ஞானபலத்தை
குவலயத்தில் தர்மமோடு கலந்து மக்களுக்கு
3. மக்களுக்கு புதுமை ஞானம் அருளும் தேசிகா
மாதவசியே உன் பிறப்பே ஞானம்தானப்பா
தேக்கமின்றி நீ செய்யும் அனைத்து சேவைகளும்
தொண்டர்களுக்கு ஞானமூட்டும் என்றுரைப்பேன்
4. உரைக்கவே உன்னை இவை பிறவி தன்னில்
உணர்ந்து வந்து கண்டாலே போதுமப்பா
மறை போற்றும் ஞானம் உலகோர் அடைவர் என்பேன்
மக்களுக்கு எளிய ஞானம் தந்தருளவே
5. அருளவே அறமாகவும் அருளாகவும் உன்னுள் கலந்து
ஆறுமுகன் யான் ஞானமாக ஜொலிக்கின்றேன்
ஐய்யமற உன்னை ஏற்றாலே போதுமப்பா
அப்பனே அனைத்து பேரும் ஞானவான் ஆவர்
6. ஆகவே அரங்கன் நீ ஞானவழியில்
அடைந்து விட்டாய் எண்ணிய இலக்குதன்னை
காப்பாக இனி உம்மை மக்கள் ஏற்றாலே போதும்
கடைத்தேறுவார் உயர் ஞானம் பெற்று ஞானயுகம் படைப்பார்
ஞான ஆசி முற்றே.

—சுபம்—

வேலூர், திரு. ம.கண்ணன் அவர்கள் ஓங்காரக்குடிலாசானின் அருளால் பெற்ற அனுபவங்கள் குறித்து. . .

அன்புள்ள ஞானத்திருவடி வாசகர்களுக்கு வணக்கம்.

சாட்சாத் முருகப்பெருமானாக வீற்றிருந்து அருள் செய்யும் நமது குருநாதர் தவத்திரு ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள் திருவடிகள் போற்றி போற்றி. என்னுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட பல்வேறு துன்பங்களால் நான் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தேன். இந்த துன்பங்கள் தீர பல கோவில்களுக்கும், ஆசிரமங்களுக்கும் சென்று வந்தேன். அங்கு ஓங்காரக்குடில் அன்பர் கோவில் வாசலில் ஞானத்திருவடி புத்தகம் கொடுத்துக் கொண்டிருந்தார். அவரிடம் என்னுடைய கஷ்டத்தை சொன்னேன். துன்பத்திலிருந்து நம்மைக் காப்பாற்றுவதற்காகவே ஓங்காரக்குடிலாசான் அவதரித்துள்ளார். அவரை சென்று தரிசனம் செய்யுங்கள் என்று சொன்னார்.

அவரிடம் ஞானத்திருவடி புத்தகத்தை வாங்கி, அதிலுள்ள சித்தர்கள் போற்றித் தொகுப்பை தினந்தோறும் திருவிளக்கேற்றி படித்து வந்தேன். ஏதோ ஒரு மன அமைதி கிடைத்தது போல இருந்தது. ஓங்காரக்குடிலுக்கு வந்து குருநாதரை தரிசனம் செய்து ஆசி கேட்டேன். அதற்கு குருநாதர் உனது துன்பங்கள் தீர அன்னதானம் ஒன்றுதான் வழி என்று எனக்கு உபதேசம் செய்தார்கள்.

குரு வாக்கால் நமக்கு கிடைத்த மிகப்பெரிய உபதேசம் என்று எண்ணி, மாதம் இருவருக்கு அன்னதானம் செய்ய துவங்கினேன். எனது வாழ்க்கையில் மாற்றம் தெரிய ஆரம்பித்தது. ஒரு நிம்மதி, அமைதி, நாமும் நல்லபடியாக வாழ முடியும் என்ற நம்பிக்கை வந்தது. அப்பொழுதுதான் நான் உணர்ந்தேன், நமது வினைப்பயன் இருக்கும்வரை துன்பம் இருக்கும். குருவின் திருவடி நிழலில் இருந்து கொண்டு, நாமஜெபம் செய்து அன்னதானம் செய்தால் நமக்கு மனஅமைதி கிடைக்கும், நம்பிக்கை கிடைக்கும். குருவின் துணையின்றி ஓர் அணுவளவும் நம்மால் எதுவும் செய்ய முடியாது என்பதை உணர்ந்தேன்.

ஆகவே அனைவரும் ஓங்காரக்குடிலுக்கு வாருங்கள், குருநாதரை பணியுங்கள், அவருடைய திருவடியை போற்றுங்கள், குருவின் திருவடி நிழலில் இளைப்பாறுங்கள், குருவின் துணை கொண்டு வாழ்க்கையை நடத்துங்கள். குருவருள் பெறாமல் இறையருள் பெற முடியாது. குருநாதர் திருவடியை சரணடைந்து, நம்மை அவரிடம் ஒப்படைத்து வளமோடு வாழ்வோம்.

இப்படி நான் அறிந்து கொண்ட உண்மையை எனது அக்கம்பக்கம் வீட்டில் உள்ளவர்களும் அறிந்து கொள்ள வேண்டுமென்று ஆசைப்பட்டேன். வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை மாலை அக்கம்பக்கம் வீட்டில் உள்ளவர்களை அழைத்து, திருவிளக்கு ஏற்றி சித்தர்கள் போற்றித் தொகுப்பை சொல்லி ஞானிகள் கூட்டு வழிபாடு செய்து வருகிறோம். பூஜை முடிந்தவுடன் எங்களால் முடிந்த பிரசாதம் அவர்களுக்கு கொடுக்கிறோம். இப்பொழுது அவர்களும் குருநாதரின் அற்புதங்களை உணர்ந்து சித்தர்கள் வழிபாடு செய்து வருகிறார்கள்.

சைவ உணவே நமக்கு நன்னெறியை வளர்க்கும், நல்ல பண்புகளை கொடுக்கும், உயர்ந்த சிந்தனையை கொடுக்கும், உடல் ஆரோக்கியம் கொடுக்கும், நல்ல சந்ததியை கொடுக்கும், மனஅமைதி கிடைக்கும், கோபம் குறையும். கடவுளை அறியவும், அடையவும் சைவ உணவே துணையாக இருக்கும். ஆகவே சைவ உணவை மேற்கொண்டு, குருநாதரை தரிசனம் செய்து வளமோடு வாழ அன்போடு அழைக்கிறேன். நன்றி வணக்கம்.

குருவின் திருவடி பணிந்து : திரு. ம.கண்ணன், வேலூர்.

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்
தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்**

## ஓங்காரக்குடில் வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (தமிழ்) | ரூ. 5 |
| 2. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (ஆங்கிலம்) | ரூ. 20 |
| 3. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (சமஸ்கிருதம்) | ரூ. 20 |
| 4. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (மலையாளம்) | ரூ. 15 |
| 5. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (கன்னடம்) | ரூ. 20 |
| 6. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (குஜராத்தி) | ரூ. 20 |
| 7. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (மராட்டி) | ரூ. 20 |
| 8. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (பெங்காளி) | ரூ. 20 |
| 9. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (பஞ்சாபி) | ரூ. 20 |
| 10. | ஞானிகள் அருளிய தினசரி பாராயண நூல் | ரூ. 75 |
| 11. | அனுபவ விளக்கப் பத்திரிக்கைகள் | ரூ. 45 |
| 12. | மனுமுறைகண்ட வாசகம் | ரூ. 50 |
| 13. | மனுமுறைகண்ட வாசகம் (ஆங்கிலம்) | ரூ. 100 |
| 14. | திருமந்திர உபதேசம் விளக்கவுரை | ரூ. 40 |
| 15. | திருமந்திர உபதேசம் விளக்கவுரை (ஆங்கிலம்) | ரூ. 40 |
| 16. | சுகமான வாசியே அகத்தீசராகும் | ரூ. 25 |
| 17. | திருக்குறள் ஞானஅமுது – குருநாதர் அருளுரை | ரூ. 60 |
| 18. | தன்னை அறியும் அறிவே தகைமையாகும் | ரூ. 15 |
| 19. | ஜீவகாருண்ய ஒழுக்கம் | ரூ. 20 |
| 20. | ஜீவகாருண்ய ஒழுக்கம் (ஆங்கிலம்) | ரூ. 30 |
| 21. | தமிழைக் கற்றால் வரும் நன்மைகள் | ரூ. 40 |
| 22. | ஞானத்திருவடி ஆண்டு மலர் தொகுப்பு | ரூ. 150 |
| 23. | சிவஞானபோதம் – குருநாதர் அருளுரை | ரூ. 30 |
| 24. | ஆத்திசூடி – விளக்கவுரை | ரூ. 50 |
| 25. | ஆத்திசூடி – விளக்கவுரை (ஆங்கிலம்) | ரூ. 100 |
| 26. | சித்தர்களின் பாடல்களுக்கு அரங்கரின் அருளுரைகள் | ரூ. 70 |
| 27. | நித்திய ஆசி நூல் தொகுப்பு | ரூ. 200 |
| 28. | 131 சித்தர்கள் அருளிய சயன சூட்சும ஆசி நூல் தொகுப்பு | ரூ. 200 |

| | | |
|---|---|---|
| 29. | 63 நாயன்மார்கள் 12 ஆழ்வார்கள் அருளிய சயன சூட்சும ஆசி நூல் தொகுப்பு | ரூ. 150 |
| 30. | 131 சித்தர்கள் அருளிய தியான சூட்சும ஆசி நூல் தொகுப்பு | ரூ. 200 |
| 31. | 63 நாயன்மார்கள் 12 ஆழ்வார்கள் அருளிய தியான சூட்சும ஆசி நூல் | ரூ. 180 |
| 32. | குருநாதர் அவர்களின் ஆன்மீகச் சொற்பொழிவு<br>ஆடியோ, வீடியோ டிவிடி<br>புனித ஞான அகத்தீசனின் பொதிகை கீதம் – ஆடியோ சிடி<br>ஞானிகள் அருளிய ஞானிகள் போற்றி, அரங்கர் சரணம்,<br>அரங்கர் போற்றி, அரங்கர் புகழ்மாலை ஆடியோ சிடி<br>சித்தர் போற்றித் தொகுப்பு<br>அகத்தீசன் தத்துவ புகழுரை<br>ஆசான் பாடல்கள் ஆடியோ சிடி.<br>சித்தர் பாடல்கள், கொடி வணக்கம்,<br>மகான் கருவூரார் புகழ் வெண்பா, மகான்<br>கஞ்சமலைச் சித்தர் புகழ் வெண்பா ஞானக்குறள் | ரூ. 10 |
| 33. | ஓங்காரக்குடிலின் ஆவணப்படம் | ரூ. 25 |
| 34. | ஞானசூட்சும ஆசி நூல் (தொகுப்பு – 1) | ரூ. 130 |
| 35. | ஞானசூட்சும ஆசி நூல் (தொகுப்பு – 2) | ரூ. 200 |
| 36. | ஞானிகள் திருஉருவப்படங்கள் | |

# அருளுரை

| | | |
|---|---|---|
| 1. | கீர்த்தித் திருஅகவல் | ரூ.15 |
| 2. | ஞானிகள் பற்றிய அனுபவ விளக்கம் | ரூ.15 |
| 3. | மகான் இராமதேவர் அருளிய யோகப்பயிற்சி பாகம்–2 | ரூ.15 |
| 4. | இருமை அறிந்தவர் பெருமை | ரூ.15 |
| 5. | ஞானத்திற்கு தடை சந்தேகமே | ரூ.15 |
| 6. | மோன நிலையே ஞானநிலை | ரூ.15 |
| 7. | அருணகிரிநாதர் புகழ்மாலை | ரூ.15 |
| 8. | முக்திக்கு தலைவன் முருகனே (பாகம் – 1) | ரூ.15 |
| 9. | முக்திக்கு தலைவன் முருகனே (பாகம் – 2) | ரூ.15 |
| 10. | முக்திக்கு தலைவன் முருகனே (பாகம் – 3) | ரூ.15 |
| 11. | முக்திக்கு தலைவன் முருகனே (பாகம் – 4) | ரூ.15 |
| 12. | பணிவே செம்மையான வாழ்வு | ரூ.15 |
| 13. | நோயில்லா வாழ்வு வாழ வேண்டுமா | ரூ.15 |

| | | |
|---|---|---|
| 14. | ஒன்றே குலம் ஒருவனே தேவன் | ரூ.15 |
| 15. | சோம்பல் ஆகாது – பாகம் 1 | ரூ.15 |
| 16. | நட்பே நன்மை தரும் | ரூ.15 |
| 17. | நன்றி மறவாதே | ரூ.15 |
| 18. | உயிருக்கு மருத்துவம் | ரூ.15 |
| 19. | விருந்தே வேள்வியாகும் | ரூ.15 |
| 20. | பூதாதி இலயம் | ரூ.15 |
| 21. | பட்டினத்தாரின் யோகமும் ஞானமும் | ரூ.15 |
| 22. | குருபக்தியே குணப்பண்பு தரும் | ரூ.15 |
| 23. | முருகன் ஆசி பெற உபாயம் (பகுதி –1) | ரூ.15 |
| 24. | முருகன் ஆசி பெற உபாயம் (பகுதி –2) | ரூ.15 |
| 25. | வள்ளுவன் கடவுள் (பாகம் – 1) | ரூ.15 |
| 26. | வள்ளுவன் கடவுள் (பாகம் – 2) | ரூ.15 |
| 27. | வள்ளுவன் கடவுள் (பாகம் – 3) | ரூ.15 |
| 28. | ஞானிகள் பூஜையே தவமாகும் | ரூ.15 |
| 29. | குருவருளே தவமாகும் | ரூ.15 |
| 30. | முருகன் ஆசிபெற உபாயம் – 3 | ரூ.15 |
| 31. | முருகன் ஆசிபெற உபாயம் – 4 | ரூ.15 |
| 32. | பூஜை | ரூ.15 |
| 33. | தவம் | ரூ.15 |
| 34. | அருட்பெருஞ்ஜோதியை அடையும் முறை | ரூ.15 |
| 35. | விதியை வெல்லும் பக்தி | ரூ.15 |
| 36. | தினசரி பாராயண நூல் | ரூ.15 |
| 37. | எமபயம் நீங்க ஓர் உபாயம் | ரூ.15 |
| 38. | குடமுழுக்கு விழா | ரூ.15 |
| 39. | பௌர்ணமி நோன்பு | ரூ.15 |
| 40. | புறபூஜையும் அகபூஜையும் | ரூ.15 |
| 41. | பூஜை முறையும் வாழ்க்கையும் | ரூ.15 |
| 42. | சுப்பிரமணியர் கடவுளானது எப்படி | ரூ.15 |
| 43. | தலைவன் திருவடியே துணை | ரூ.15 |

| | | |
|---|---|---|
| 44. | தயவே சித்தி தரும் | ரூ.15 |
| 45. | திருமந்திர உபதேசம் | ரூ.15 |
| 46. | ஆன்மீக அரசியல் | ரூ.15 |
| 47. | தானமும் தவமும் | ரூ.15 |
| 48. | குருசீடர் நெறிமுறை | ரூ.15 |
| 49. | இல்லறத்தார்க்கு ஓர் உபதேசம் | ரூ.15 |
| 50. | சைவமே ஜென்மத்தைக் கடைத்தேற்றும் | ரூ.15 |
| 51. | வாசி வசப்படல் | ரூ.15 |
| 52. | உண்மை ஆன்மீகம் என்றால் என்ன? | ரூ.15 |
| 53. | எது ஆன்மீகம் | ரூ.15 |
| 54. | விநாயகர் அகவல் | ரூ.15 |
| 55. | பிரபஞ்ச இயக்கம் | ரூ.15 |
| 56. | இருள்சேர் இருவினையும் சேரா இறைவனே வள்ளுவப்பெருமான் | ரூ.15 |
| 57. | தன்னை அறியும் முறை | ரூ.15 |
| 58. | நமசிவாயம் | ரூ.15 |
| 59. | மோட்சகதி | ரூ.15 |
| 60. | திருக்குறளில் குற்றங்கடிதல் | ரூ.15 |
| 61. | பூரணம் எனும் யோகரகசியம் | ரூ.15 |
| 62. | சிவஞானபோதம் 12வது சூத்திர விளக்கம் | ரூ.15 |
| 63. | பஞ்சபூத விளக்கம் | ரூ.15 |
| 64. | சித்த தத்துவமும் பொருளாதாரமும் | ரூ.15 |
| 65. | ஆலய வழிபாடு | ரூ.15 |
| 66. | சமூக சான்றோரும் ஆன்மீக சான்றோரும் | ரூ.15 |
| 67. | சன்மார்க்கத்தில் சித்தாந்தம் | ரூ.15 |
| 68. | சொர்க்க வாசல் | ரூ.15 |
| 69. | சும்மா இரு என்னும் இரகசியம் | ரூ.15 |
| 70. | காயமே இது பொய்யடா | ரூ.15 |

**மகான் பதஞ்சலியார் புத்தக நிலையம்**

**ஓங்காரக்குடில், துறையூர்.**

செல் : 90956 33344

ஓங்காரக்குடில் வெளியீடுகளைப் பெற

# மகான் பதஞ்சலியார் புத்தக நிலையம்

ஓங்காரக்குடில், துறையூர் - 621010, திருச்சி மாவட்டம்.
செல் - 90956 33344 kudilbooks@gmail.com

எங்களது வெளியீடுகளைப் பெற...

தங்களின் முழு முகவரி மற்றும் தங்களின் செல் போன் எண் தெளிவாக எழுதி புத்தகத்திற்கு உண்டான தொகையை கீழ்க்கண்ட முறைகளில் அனுப்பலாம். (கூரியர் செலவிற்கும் சேர்த்து அனுப்பவும்)

Cheque - காசோலை
DD - வரைவோலை
MO - பணவிடை

....................................

Cheque, DD எடுக்க வேண்டிய பெயர் -

**MAHAN PATHANJALIYAR BOOK STALL,**
**Payable at "Thuraiyur" or "Tiruchirapalli"**

ஓங்காரக்குடில் வெளியீடுகளை பெற கீழ்க்கண்ட முறையில் பணம் அனுப்பலாம்.

Amount Transfer செய்ய வேண்டிய விபரம் -

| | | |
|---|---|---|
| **NAME** | : | **MAHAN PATHANJALIYAR BOOK STALL** |
| **BANK NAME** | : | **Karur Vysya Bank (KVB)** |
| **ACCOUNT NO** | : | **1646135000003720** |
| **IFSC CODE** | : | **KVBL0001646** |
| **BRANCH** | : | **THURAIYUR** |

**இணையம் மூலமாக ஞானத்திருவடி சந்தா செலுத்தவும் மற்றும் புதுப்பிக்கவும் புதிய வசதி**

www.agathiar.in என்ற இணையத்தில் சென்று தங்களுடைய பெயர் மற்றும் முகவரி, அலைபேசி எண் பதிவு செய்து, New User Name and Password கொடுத்து Register செய்து சந்தா செலுத்தினால் மாதந்தோறும் ஞானத்திருவடி மாத இதழ் தங்களது இல்லத்திற்கு தபால்நிலையம் மூலம் அனுப்பப்படும்.

**Payment Options : Net Bank, Debit (or) Credit Card, Paytm**

தொடர்புக்கு :

செல் : **96882 78666, trustkudil@gmail.com**

முருகப்பெருமான் துணை

# நன்கொடை வழங்க...

## அன்னதானம் செய்தால் துன்பங்கள் விலகும்.

கடந்த 43 ஆண்டுகளாக 15 கோடி மக்களுக்கு மேலாக அன்னதானம் செய்து தன் அறப்பணியினை சிறப்புற தொடர்ந்து வருகிறது நமது ஓங்காரக்குடில். இந்த அறப்பணிகளில் நீங்களும் பங்கேற்க வேண்டுமா.

பிரச்சனைகள் தீரவும், தங்களின் பிறந்தநாள், திருமணநாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில் அல்லது வியாபாரம் தொடங்கிய நாள் மற்றும் பண்டிகை நாட்களிலும் அன்னதானம் செய்ய விரும்புவோர் DD, Cheque, M.O. மூலம் தங்களின் அருட்கொடையினை வழங்கலாம்.

தங்கள் நன்கொடைக்கு 80G பிரிவின் படி வருமானவரி விலக்கு உண்டு.

**DD, Cheque, M.O. எடுக்க வேண்டிய முகவரி :**

**SRI AGATHIAR SANMAARGA CHARITABLE TRUST,**
Payable at Thuraiyur or Trichy.

**Account Details :**

| | | |
|---|---|---|
| A/C Name | : | SRI AGATHIAR SANMAARGA CHARITABLE TRUST |
| A/C NO | : | 911010045586268 |
| Bank | : | Axis Bank |
| Branch | : | Thuraiyur.621010 |
| IFS Code | : | UTIB0001272 |

**அனுப்ப வேண்டிய முகவரி :**

**SRI AGATHIAR SANMAARGA CHARITABLE TRUST,**
113, Extension, Thuraiyur - 621010, Trichy (Dt),
Tamilnadu, India. Ph - 04327 255184. www.agathiar.in

**www.agathiar.in**

என்ற இணைய தளத்தில் உங்கள் பெயரையும், கடவுச்சொல்லையும் பதிந்தபிறகு நன்கொடை செலுத்தி தாங்களும் அன்னதானத்தில் பங்கேற்று புண்ணியத்தை பெறலாம்.

தாங்கள் அனுப்பிய தொகைக்கான இரசீது தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

இரசீது கிடைக்கப்பெறாதவர்கள் தொடர்புக்கு :

96882 78666, 91503 75562. trustkudil@gmail.com

அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

# தவத்திரு ஆறுமுக அரங்கமகா தேசிகரின் அமுத மொழிகள்...

1. முருகா என்றால் மும்மலக் குற்றங்கள் நீங்கும்.
2. முருகா என்றால் செல்வநிலை பெருகும்.
3. முருகா என்றால் நல்லறிவைப் பெறலாம்.
4. முருகா என்றால் வறுமை, நோய்நொடிகள் நீங்கும்.
5. முருகா என்றால் ஞானவாழ்வு கைகூடும்.
6. முருகா என்றால் மரணமில்லாப் பெருவாழ்வைப் பெறலாம்.

## உயிர் இரக்கமே இறைவழிபாடு....

**சென்னையில் அப்பார்ட்மெண்ட் மற்றும் தனி வீடு, வீட்டு மனைகள் வாங்க விற்க அணுகவும்.**

குருவருள் வேண்டி

**ம. அருள் பிரகாசம்**

**Srilekha Homes**
Gift to your dream

Plot No: 41, 2nd Floor, V.G.P. BABU NAGAR,
MEDAVAKKAM, CHENNAI - 100

**Cell : 98841 27766 , 94449 88877**

"சிவாய ஆறுமுக அரங்கமகா தேசிகாய நம"

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. –குறள் 226.

# சுந்தரானந்தர் எலக்ட்ரிகல்ஸ்

54–தெற்கு சிவன் கோயில் தெரு, வடபழனி,

சென்னை – 600 026.

✆ 044–24720499, 23721160.

# "அன்னதானம் செய்தால் துன்பங்கள் தீரும்"

குருவருள் வேண்டி . . .

# கணேஷ் ஹார்டுவேர்ஸ் & அலுமினியம்,

No.72A – 100 அடி ரோடு, வடபழனி,

சென்னை – 600 026.

Cell : 98400 – 20828. ✆ 044 – 23651284, 23652568.

## அருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அருளிய அருட்பெருஞ்ஜோதி அகவல்

இதுஅது என்னா இயலுடை அதுவாய்
எதிர்அற நிறைந்த என்தனி இன்பே
ஆக்குறு மவத்தைகள் அனைத்தையும் கடந்துமேல்
ஏக்கற நிறைந்த என்தனி இன்பே
அறிவுக்கு அறிவினில் அதுஅது அதுவாய்
எறிவற்று ஓங்கிய என்தனி இன்பே
விடயம் எவற்றினும் மேன்மேல் விளைந்தவை
இடையிடை ஓங்கிய என்தனி இன்பே
இம்மையும் மறுமையும் இயம்பிடும் ஒருமையும்
எம்மையும் நிரம்பிடும் என்தனி இன்பே

## ஜீவகாருண்ய ஒழுக்கமே கடவுள் வழிபாடு

குருவருள் வேண்டி . . .

**ANU BUILDERS (INDIA) Pvt. Ltd.**

**Builders & Estates**

Plot No.37, 2nd Main Road,
V.G.P. Babu Nagar, Medavakkam,
Chennai - 600 100.
Phone: 2277 0495,
E-mail : anubuilders@yahoo.com
Website : www.anubuilders.in

# கவனகர் முழக்கம்

மாத இதழ் – ரூ. 25/–

கவனகரின்

- ஆழமான ஆன்மீக விளக்கங்கள்
- அறிவுபூர்வமான சிந்தனையைத் தூண்டும் கருத்து மலர்கள்.
- விந்தையான பதில்கள் மற்றும் அனைத்துச் சிறப்பம்சங்களும் நிறைந்த மாத இதழ்.

**தமிழர்களின் வாழ்க்கைப் பாதையை வெற்றிப்பாதையாக மாற்ற வழிகாட்டும் இதழ் இப்பொழுது புதிய வடிவமைப்புடன் வெளிவருகிறது**

# கவனகர் முழக்கம்

**ஆசிரியர் :-**

உலகத் தமிழர்களில் ஓர் அதிசய மனிதர், பல்கலை வித்தகர், பதினாறு கவனகர், நினைவு கலைச்செம்மல், மனிதகணிணி

**திருக்குறள்**

# இராம.கனகசுப்புரத்தினம்

மேலும் விபரங்களுக்கு . . .

1/8, மனோஜ் நகர், சாந்தி கியர்ஸ் பவுண்டரி சாலை, கண்ணம்பாளையம், சூலூர், கோவை–641 402. செல் : 94440 55166

மற்றும்

**A.செந்தில்குமார்**

4/248, Maxworth Nagar, சுண்ணாம்பு கௌத்தூர், கோவிலம்பாக்கம், சென்னை–117. ✆ 98414 64388.

மெகா டிவியில் தினமும் காலை 7.30 மணிக்கு கவனகர் அய்யா அவர்களின் வெற்றி நிச்சயம் நிகழ்ச்சி பார்த்து பயன்பெறுங்கள்

அகத்தியர் துணை

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்,

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்**

அவர்கள் தலைமையில்

# ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளையின்

## நித்திய செயல்பாடுகள்

| | |
|---|---|
| காலை 6.00 | முருகப்பெருமானின் சரவண ஜோதி வழிபாடு<br>ஞானியர் அருளிய நூல்கள் பாராயணம்<br>தியானம் (நாமஜெபம்) |
| காலை 7.30 | பெருமாள்மலை அடிவாரத்தில் அன்னதானம். |
| காலை 8.00 | ஓங்காரக்குடிலில் அன்னதானம் |
| மதியம் 1.00 | ஓங்காரக்குடிலில் அன்னதானம் |
| **மதியம் 3.00** | முருகப்பெருமானின் கல்கி அவதாரம்<br>**ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள் தரிசனம்** |
| மாலை 5.00 | கிராம அன்னதானம் |
| மாலை 6.00 | அருட்ஜோதி வழிபாடு – தியானம் (நாமஜெபம்)<br>ஆசான் அகத்தீசர் வழிபாடு |

குறிப்பு: பிரதி வியாழக்கிழமை தோறும் காலை 9.30 மணியளவில் ஞானியர்கள் சிறப்பு பூஜையும், குருநாதர் அவர்களின் தரிசனமும் நடைபெறும்.


ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளைக்காக வெளியிடுபவர்

S.செந்தில்குமார், நிர்வாக அறங்காவலர்,

113–நகர் விரிவாக்கம், துறையூர்–621 010, திருச்சி மாவட்டம்.

ஆசிரியர் – இரா.மாதவன்.

அச்சிட்டோர் :

இராம.தொல்காப்பியன்,

வாஞ்சி மறுதோன்றி அச்சகம், கூட்டுறவு நகர், துறையூர்.

# ஞானத்திருவடி - மாத இதழ்

## சந்தாப் படிவம்

☐ 1 வருடச் சந்தா ரூ.120/–     ☐ 3 வருடச் சந்தா ரூ.350/–

திரு/திருமதி. : ____________________

முகவரி : ____________________

____________________

ஊர் : ____________ பின்கோடு ____________

வட்டம் : ____________ மாவட்டம் ____________

தொலைபேசி : ____________ (கைபேசி) ____________

சந்தா செலுத்தும் முறை

☐ CHEQUE காசோலை   ☐ DD வரைவோலை   ☐ MO–பணவிடை

☆ வரைவோலையை Sri Agathiar Sanmaarga Charitable Trust என்ற பெயரில் எடுக்கவும்.

☆ வரைவோலையை payable at Trichy (or) Thuraiyur என்று எடுக்கவும்.

☆ சந்தா அனுப்பும்போது கவரில் பணம் வைத்து அனுப்ப வேண்டாம். பணம் தவறினால் நிர்வாகம் பொறுப்பன்று.

☆ எங்களுக்கு தாங்கள் அனுப்பிய சந்தா கிடைத்த மாதத்திற்கு அடுத்த மாதம் 1–ம் தேதி முதல் மாதஇதழ் தங்களுக்கு அனுப்பப்படும்.

☆ தங்களின் தொலைபேசி எண்ணை மறவாமல் குறிப்பிடவும்.

நாள் :

செலுத்துபவர் கையொப்பம்

படிவத்தை பூர்த்தி செய்து கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.

**ஞானத்திருவடி - மாத இதழ்**

**ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளை**

ஓங்காரக்குடில், 113–நகர்விரிவாக்கம், துறையூர் – 621 010. திருச்சி மாவட்டம்.

ஓங்காரக்குடில் அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

ரசீது எண் : ............ தேதி : ............ ரூபாய் : ............

சந்தாதாரர் முகவரி மாற்றம் இருப்பின் கடிதம் மூலம் தெரிவிக்கவும்